# திருக்கோயில்




மார்ச்
2004

விலை
ரூ 7.00



சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் திருக்குட நீராட்டுவிழா 11-02-03 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் நம் இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு ஜி. இராமகிருஷ்ணன் இ.ஆ.ப. அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். அறநிலையத் துறையின் தலைமைப் பொறியாளர் திருமிகு வெ. சோமசுந்தரம் பி.இ., எம்.எஸ்.சி அவர்கள், இணை ஆணையாளர் (திருப்பணி) திருமிகு ப. தனபால் எம்.ஏ., பி.எல் ஆகியோரும் இவ்விழாவில் பங்குகொண்டு சிறப்பித்தார்கள். திருக்கோயிலின் இணை ஆணையாளர் / நிர்வாக அதிகாரி திருமிகு தி. ஜெயராமன் பிஏ.பி.எல் அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.

# திருக்கோயில்



## திங்கள் இதழ்



| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ. 7.00 |
| ஆண்டு உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 75.00 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 1000.00 |

மாலை 46 — திருவள்ளுவர் ஆண்டு 2035 — சுபானு - பங்குனி மார்ச் 2004 — மணி 3



### சிறப்பாசிரியர்

**திருமிகு ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப.**
ஆணையாளர்

### ஆசிரியர்

**முனைவர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி.**

### "திருக்கோயில்" நிர்வாகக் குழுவினர்

**திருமிகு எஸ். கனகய்யா,** பி.எஸ்.சி., பிஎல்.
கூடுதல் ஆணையாளர்

**திருமிகு த. சுந்தரம்,** பி.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்

**திருமிகு ஆ. குப்புசாமி,** பி.ஏ. பிஎல்.
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

**திருமிகு கே.கே. இராஜா,** எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி


## பொருளடக்கம்


**ஆழ்வார்கள் அருளிய அருள்நெறி**
- திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப.
அரசுச் செயலாளர்

**திருமந்திர உபதேசம்**
- திருமந்திரச் செம்மல் திருமிகு
டி.வி. வெங்கட்ராமன் இ.ஆ.ப. (ஓய்வு)

பாவ புண்ணியங்கள் - திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப.

அன்னை திருப்பாதம் - கவிஞர் பி.கே. சந்திரசேகரன்

மகாமகம் 2004 - ப. தனபால் எம்.ஏ. பி.எல்.

பங்குனி உத்திரம்

**படிக்கின்றிலை பழநித் திருநாமம்**
முனைவர் த. அமிர்தலிங்கம்

**கண்கொள்ளாக் கயிலாயம்**
- கயிலைப் புனிதர் மனோகர்

**ஆமாறுன் திருவடிக்கே அகம் குழையேன்**
- முனைவர் அரு. சுப்பிரமணியன்

**மருள்போக்கும் அருள்மிகு மீனாட்சி**
கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

**வீரநாராயணபுரம் (அ) காட்டுமன்னார் கோயில்**
- திருமதி இந்திரா ஆரா அமுதன்

ஸ்ரீராமநவமி - திருமதி மீனாட்சி கோகுலவாசன்


<u>முகப்பு</u>

**திருக்குடந்தை நவநதிக் கன்னியர்**
**நீராடும் மகாமகத் திருக்குளம்**


உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி:

உயர்திரு ஆணையாளர் அவர்கள்

*திருக்கோயில்*

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

தொலைபேசி: 28334811, 28334812, 28334813

# ஆழ்வார்கள் அருளிய அருள்நெறி

- திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.
அரசுச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் இந்து சமய
அறநிலைய ஆட்சித்துறை

(சென்ற இதழின் தொடர்ச்சி)

சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரத்தில் திருக் கோளூரில் திருஅவதாரம் புரிந்த மதுரகவி ஆழ்வார் நம்மாழ்வரையே தெய்வமாக வழிபட்டு உய்ந்து, நம்மாழ்வார் புகழ்ப்பரவி வாழ்ந்த ஆழ்வார் பெருமான் ஆவார். நம்மாழ்வாரின் புகழ்போற்றி அவர் பாடிய ''கண்ணிநுண் சிறுத்தாம்பு'' பதினோரு பாசுரங்க ளையே கொண்டு விளங்கிய போதும் அவற்றைப் பன் னீராயிரம் முறை பாராயணம் செய்த புண்ணியப் பயனாலேயே நம்பியாண்டார் நம்பிகள் ''நாலாயிரத் திவ்விய பிரபந்தம்'' முழுமையும் இஞ்ஞாலம் உய்ய நமக்குப் பெற்று வழங்கினார் என்பது நாம் உணர்ந்து இன்புறத்தக்கது.

''கண்டுகொண்டென்னைக் காரிமாறப் பிரான்
பண்டை வல்வினை மாற்றி அருளினான்
எண்திசையும் அறிய இயம்புகேன்
ஒண்டமிழ்ச் சடகோபன் அருளையே.''

''அருள்கொண்டாடும் அடியவர் இன்புற
அருளினான் அவ்வரு மறையின் பொருள்
அருள்கொண்டு ஆயிரம் இன்தமிழ் பாடினான்
அருள்கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே.''

எனவரும் ''கண்ணிநுண் சிறுத்தாம்பு'' பாசுரங்கள் நம்மாழ்வார் அருமையையும், பெருமையையும் நமக்கு நன்கு உணர்த்துகின்றன. மதுரகவியாழ்வார் ''தேவு மற்றறியேன்'' என நம்மாழ்வார் மேல் கொண்டிருந்த குருபக்திக்கு ஈடு இணை இல்லை என்றே கூறுதல் வேண்டும். அத்தகைய ''குருபக்தி'' நாமும் பெற, மதுரகவி ஆழ்வார் நமக்குத் திருவருள் புரிவாராக!

அரச வாழ்வை வெறுத்து திருமால் திருவடியே எஞ்ஞான்றும் பரவிப் பேரின்பம் கண்ட குலசேக ராழ்வார் பெருமையை எவ்வாறு எடுத்துரைக்க இயலும்?

பரந்த அரண்மனை, பட்டத்து யானை, அந்தப்புரச் சுகங்கள், அளவிலா ஐஸ்வரியங்கள் - அத்தனையும் வெறுத்து ஒதுக்கி திருமால் அடியார்களுடன் கூடிப் பாடி, அவர்தம் அடிப்பொடிக்கு ஆசைகொண்ட குலசேகராழ்வாருக்கு ஈடு இணை இல்லை என்றே கொண்டாட வேண்டும்.

கங்கைநீர் குடைந்தாடினால் பாவம் நீங்கும். அதைவிடவும் திருவரங்கநாதனைப் பாடி 'அரங்கா ஓ' என்று ஆர்ப்பரித்து அழைத்துக் கொண்டாடக் கூடிய திருமால் அடியார்களின் திருவடிபட்ட மண்ணின் பொடியானது மேனியில் படுமாறு ஆடப் பெற்றால் அதனால் பெறக்கூடிய புண்ணியத்திற்கு அளவே இல்லை என்று பாடுகின்றார் அரச ஆழ்வாரும், கவிஞருமான நம் குலசேகராழ்வார்.

''திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி
திரைக்கையால் அடிவருடப் பள்ளி கொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக் கண்டு
கொண்டென்
கண்ணிணைகள் என்றுகோலோ களிக்கும்
நாளே.''

''ஆடிப்பாடி அரங்கஓ என்று
அழைக்கும் தொண்டர் அடிப்பொடி
ஆடநாம் பெறில் கங்கைநீர் குடைந்து
ஆடும் வேட்கை என் ஆவதே!''

''கம்பமத யானைக் கழுத்தகத்தின் மேலிருந்து
இன்பமரும் செல்வமும் இவ்வரசும் யான்வேண்டேன்,
எம்பெருமான் ஈசன் எழில் வேங்கட மலைமேல்
தம்பமாய் நிற்கும் தவம் உடையேன் ஆவேனே!''

''ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்
தேனார் பூஞ்சோலை திருவேங்கடச் சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதி உடையேன் ஆவேனே''.

''செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே வேங்கடவா நின் கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும், அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே.''

எனவரும் குலசேகராழ்வாரின் அருட்பாசுரங்கள் அவருடைய அளவிறந்த பக்தியை நமக்கு உணர்த்து கின்றன.

இராமாயணக் காலசேபம் கேட்பதில் அளவிறந்த காதல் கொணடு விளங்கிய குலசேகராழ்வார், கரதூட ணாதி அரக்கர்கள் இராமருடன் போருக்கு வந்துற்ற வரலாற்றைக் காலசேபம் செய்தவர் விவரித்தபோது, தம் சேனைகளை உடனே இராமருக்கு ஆதரவாகத் திரட்டிக் கொண்டு போருக்குப் புறப்பட்டு விட்டார் என்றால் அவருடைய இராம பக்தியை என்னென்பது?

''மன்னுபுகழ்க் கௌசலைதன் மணிவயிறு
வாய்த்தவனே!
தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய்
செம்பொன்சேர்
கன்னிநன் மாமதிள்புடைசூழ் கணபுரத்தென்
கருமணியே.'
என்னுடைய இன்னமுதே இராகவனே தாலேலோ!''

''சுற்றமெல்லாம் பின்தொடரத் தொல்கானம்
அடைந்தவனே!
அற்றவர்கட்கு அருமருந்தே! அயோத்திநகர்க்
கதிபதியே!
கற்றவர்கள் தாம்வாழும் கணபுரத்தென் கருமணியே!
சிற்றவை தன் சொற்கொண்ட சீராமா தாலேலோ!''

என்ற இவர்தம் பாசுரங்கள் இவர்தம் அளவிறந்த இராம பக்தியை நமக்குத் தெளிவுறுத்துகின்றன.

பாகவதர்கள் மேல் குலசேகராழ்வார் கொண்டி ருந்த அளவிறந்த காதலைச் சீர்குலைக்கும் வண்ணம் சுவாமி திருவாபரணத்தை அமைச்சர்களே களவாடிப் பாகவதர்களே களவாடியிருப்பர் என்று பொய்யுரைத் தார்கள். ''பாகவதர்கள் ஒருபோதும் இத்தகைய இழிதொழிலைச் செய்ய நினைக்கவும் மாட்டார்கள். இது திண்ணம், இதனை யான் உங்களுக்கு உறுதிப் படுத்துவேன்'' என்று உறுதிபடக்கூறி பாம்பு அடைத்த குடத்தை அரசவைக்கு வரவழைத்து ''பாகவதர்கள் பாவம் செய்து இரார் என்பது உண்மை ஆயின் இப் பாம்பு என்னைத் தீண்டாது. பாகவதர் திருடர்கள் ஆனால் இப்பாம்பு என்னைத் தீண்டிக் கொல்லும்'' என்று சபதம் செய்து, பாம்புக்குடத்தில் கையை விட்ட குலசேகராழ்வார் கொண்ட நம்பிக்கையை என்னென்று வியப்பது?

இவ்வாறு பாம்புக் குடத்தில் கையை விட்டு பரம பாகவதர்களின் சத்தியத்தை மெய்ப்பித்துக் காட்டிய குலசேகராழ்வார். பொய்ம்மைக்கு இடமான அரசாட்சியை வெறுத்தும் துறந்தும் திவ்விய தேசங்கள் பலவற்றிற்குச் சென்று தரிசனம் செய்து திருக்குருகூர் வந்தார். திருக்குருகூர் அருகில் உள்ள பிரமதேசம் என் னும் தலத்தை அடைந்து அங்குள்ள ஸ்ரீராஜகோபால சுவாமி சந்நிதியிற் திருத்தொண்டு செய்து வாழ்ந்து தமது அறுபத்தேழாவது பிராயத்தில் பரம பதம் அடைந்தார். ''படியாய்க் கிடந்துன் பவளவாய் காண் பேனே'' என்று வேண்டிப் பாடிய இவர்தம் பெரு விருப்பத்தின் படியே திவ்விய தேசங்கள் அனைத் திலும் கருவறையின் வாயில்படி ''குலசேகரன் படி'' யாக இன்றும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

''விஷ்ணு சித்தர்'' என்ற திருப்பெயர் கொண்ட பெரியாழ்வார் ஸ்ரீவில்லிபுத்தூரில் திருஅவதாரம் புரிந்து வடபெருங் கோயிலுடையாருக்கு நந்தவனத் திருத்தொண்டு புரிந்த அருளாளர் ஆவார்.

இவரே நந்தவனத்தில் துளசிச் செடியின் நடுவே ''ஆண்டாளை''க் குழந்தையாகக் கண்டெடுத்து அவரை வளர்த்த வளர்ப்புத் தந்தையும் ஆவார்.

ஸ்ரீவில்லிபுத்தூர் எம்பெருமான் ஆணைப்படி மதுரை சென்று, பாண்டிய மன்னனுடைய அரசவை யில் ஸ்ரீமந் நாராயணரே பரம்பொருள் என்று நிலை நாட்டிப் பொற்கிழி பெற்றவர்.

பொற்கிழி பெற்றுப் பாண்டிய மன்னனின் ஆணைக்கு இணங்கப் பட்டத்துயானைமேல் ஏறி வீதிவலம் வருகையில் பரமபதநாதர் பிராட்டி யாருடனே பெரிய திருவடியின் மீதேறி எதிரில் வந்து காட்சியருளக் கண்டு யானைமணிகளையே தாளமாகக் கொண்டுத் ''திருப்பல்லாண்டு'' பாடி, எம்பெருமா னுக்கே 'திருப்பல்லாண்டு' பாடிய காரணத்தால் ''பெரியாழ்வார்'' எனப் பெருமை செய்யப் பெற்றவர் இப் பெரியாழ்வார் ஆவார்.

நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தில் முதலில் வைத்துப் பெருமை செய்யப் பெறுவது, பெரியாழ் வார் செய்தருளிய திருப்பல்லாண்டுப் பாசுரங்களே ஆகும்.

''பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா உன்
சேவடி செவ்வி திருக்காப்பு''

''அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி
ஆயிரம் பல்லாண்டு
வடிவாய்நின் வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும்
பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துறையும் சுடர் ஆழியும்
பல்லாண்டு
படைபோர்புக்கு முழங்கும் அப்பாஞ்ச சன்னியமும்
பல்லாண்டே.''

எனவரும் பெரியாழ்வார் ''திருப்பல்லாண்டு'' திருப் பாசுரங்களைப் பாடிப் பரவாத திருமால் அடியார்களே இல்லை எனலாம்.

இவையன்றிப் பெரியாழ்வார் அருளிச் செய்த பாசுரங்கள் ''பெரியாழ்வார் திருமொழி'' என வழங்கப் பட்டு வருகின்றன.

கண்ணனைக் குழந்தையாகக் கண்டு இவர் பாடியுள்ள தாலாட்டுப் பாசுரங்களே தமிழ் மொழியில் ''பிள்ளைத்தமிழ்'' எனும் சிற்றிலக்கியம் தோன்ற வழிசெய்தன என்று ஆய்வாளர்கள் பலர் போற்றி உரைக்கின்றனர்.

''சீதக் கடலுள் அமுதன்ன தேவகி
கோதைக் குழலாள் அசோதைக்குப் போத்தந்த
பேதைக் குழவி பிடித்துச் சுவைத்துண்ணும்
பாதக் கமலங்கள் காணீரே!
பவள வாயீர் வந்து காணீரே!''

''மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி
ஆணிப் பொன்னாற் செய்த வண்ணச் சிறு
தொட்டில்
பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக் குறளனே தாலேலோ!
வையம் அளந்தானே தாலேலோ!''

எனவரும் ''பெரியாழ்வார் திருமொழிப்'' பாசுரங்கள் கற்க களிபேருவகை தரவல்லன வாகும்.

''பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை'' என வையம் கொண்டாடும் ஆண்டாள் அருளிச் செய்த ''திருப்பாவைப்'' பாசுரங்கள் முப்பதும், ''நாச்சியார் திருமொழி'' 143 பாசுரங்களும் நம் தமிழ்செய்த தவம் என்றே கூறுதல் வேண்டும்.

''ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்குப் பெருஞ் செந்நெல் ஊடு கயலுகள
பூங்குவளைப் போதில் பொருவண்டு கண்படுப்ப
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீகாத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்''

''ஆழிமலைக் கண்ணா ஒன்றும்நீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொண்டு ஆர்த்தேறி
ஊழிமுதல்வன் உருவம்போல் மெய்கறுத்து
பாழியந் தோளுடைப் பத்மநாபன் கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்''

என வரும் திருப்பாவைப் பாசுரங்கள் பாவை நோன்பிருந்து பாவையர்கள் வழிபட்டால் திருமால் அருளால் இவ்வையம் சொர்க்கமாகும் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

மார்கழியில் பாவை நோன்பிருந்து திருப்பாவை பாடினால் 'தை பிறந்தால் வழிபிறக்கும்' என்ற முதுமொழிக்கு இணங்க மங்கைநல்லார்க்கு நல்ல மணவாழ்க்கை விரைந்து கைகூடிவிடும் என்பதையும் ''நாச்சியார் திருமொழிப்'' பாசுரங்கள் நமக்கு நன்கு உணர்த்துகின்றன.

''வாரணமாயிரம் சூழவலம்செய்து
நாரணன் நம்பி நடக்கின்றான் என்றெதிர்
பூரணப் பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீநான்''

''நாளை வதுவை மணமென்று நாளிட்டு
பாளை கமுகு பரிசுடைப் பந்தற்கீழ்
கோளரி மாதவன் கோவிந்தன் என்பானோர்
காளைபுகுதக் கனாக்கண்டேன் தோழீநான்''

''மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிறைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னை
கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழீநான்.''

என்று ஆண்டாள் கண்ட கனவின்படியே, அரங்கர் நவரத்தினப் பல்லக்குடனே பரிவாரங்களை அனுப்பி ஆண்டாளைத் திருவரங்கத்திற்கு வரவழைத்துக் கடிமணம் கொண்டருளின அருமையான வரலாற்றை நாம் அறிந்து அகம்பூரிக்கின்றோம்.

திருஆடிப் பூரத்து செகத்துதித்தாள் வாழியே
திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை
வாழியே
பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள்
வாழியே

ஒருநூற்று நாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே
உயர்அரங்கற்கே கண்ணிஉகந் தளித்தாள்
வாழியே
மருவாரும் திருமல்லி வளநாடி வாழியே
வண்புதுவை நகர்க்கோதை மலர்ப்பதங்கள்
வாழியே''

என நாமும் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி ஆண்டாளை அனுதினமும் வாழ்த்தி மகிழ்ந்திடுவோமாக!

திருவரங்கப் பெருமானுக்குப் பெரியாழ்வாரைப் போலவே திருநந்தவனத் தொண்டு புரிந்து வாழ்ந்தவர் ''விப்ரநாராயணர்'' எனும் இயற்பெயர் கொண்டிருந்தவரான தொண்டரடிப் பொடி ஆழ்வார்.

திருமண்டங்குடியில் அந்தணர் குலத்தில் தோன்றிய இவ்வாழ்வார் பெருமகனார் தேவதேவி என்ற தாசியின் மயக்கில் வீழ்ந்தபோது, பொருளில்லாத ஆழ்வாரை ஏற்று இன்பம் தர அத்தாசி மறுத்தாள். அரங்கப் பெருமான் ஆழ்வாரின் துயர் துடைக்க விழைந்து, ஆழ்வாரின் பணியாளாய் தேவதேவியின் இல்லம்சென்று தம் திருக்கோயிலுக்குரிய பொன் வட்டிலைத் தந்து, விப்ரநாராயணரை தேவதேவி ஏற்று இன்பம் வழங்குமாறு திருவருள் புரிந்த திருவிளையாடலை என்னென்பது? இறைவருக்குரிய பொன்வட்டிலைக் களவு புரிந்த குற்றவாளி என்ற பழி, ஆழ்வாருக்கு உண்டாக அரசன் விப்ரநாராயணரைத் தண்டிக்காத வண்ணம் உண்மையை உணர்த்தி அரங்கப் பெருமான் அவரைத் தொண்டரடிப் பொடி ஆழ்வாராக ஆட்கொண்டு கருணைபுரிந்த திருவருள் திறமும் வியந்து போற்றுதலுக்கு உரியது.

தொண்டரடிப் பொடி ஆழ்வார் பாடியுள்ள ''திருமாலை'' ''திருப்பள்ளி எழுச்சி''ப் பாசுரங்கள் நம் நெஞ்சை உருக்கவல்லவை ஆகும்.

''பச்சைமாமலைபோல் மேனி
பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே!
ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரு ளானே.''

''ஊரிலேன் காணி இல்லை
உறவுமற் றொருவர் இல்லை
பாரில்நின் பாத மூலம்
பற்றிலேன் பரம மூர்த்தி
காரொளி வண்ணனே
கண்ணனே கதறு கின்றேன்
ஆருளர் களைகண் அம்மா
அரங்கமா நகரு ளானே!''

''குடதிசை முடியை வைத்துக்
குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டித்
தென்திசை இலங்கை நோக்கிக்
கடல்நிறக் கடவுள் எந்தை
அரவணைத் துயிலுமாக் கண்டு
உடல் எனக் குருகு மாலோ
என்செய்கேன் உலகத் தீரே!''

''கங்கையிற் புனித மாய
காவிரி நடுவு பாட்டு
பொங்குநீர் பரந்து பாயும்
பூம்பொழில் அரங்கம் தன்னுள்
எங்களமால் இறைவன் ஈசன்
கிடந்ததோர் கிடக்கை கண்டும்
எங்ஙனம் மறந்து வாழ்கேன்
ஏழையேன் ஏழை யேனே.''

எனவரும் பாசுரங்கள் நம் நெஞ்சை நெகிழ வைக்கின்றன.

திருமால் அடியார்களைப் பழிப்பவர்களே இழி குலத்தார் எனவும், திருமால் அடியார்கள் சாதி வேறுபாடின்றிப் பெண் கொடுக்கவும், கொள்ளவும் வேண்டுமென இவர் பாடியுள்ள பாசுரக் கருத்துகள் புதுமை மிக்கவை; புரட்சி மிக்கவை ஆகும்.

''பழுதிலா ஒழுக லாற்றுப்
பலசதுப் பேதி மார்கள்
இழிகுலத் தவர்க ளேனும்
எம்மடி யார்கள் ஆகில்
தொழுமின்நீர் கொடுமின் கொள்மின்
என்றுநின் னோடு மொக்க
வழிபட அருளி னாய்போலும்
மதிள்திரு அரங்கத் தானே!''

''அமரவோர் அங்கம் ஆறும்
வேதமோர் நான்கும் ஓதி
தமர்களில் தலைவர் ஆய
சாதி அந் தணர்க ளேனும்
நுமர்களைப் பழிப்பர் ஆகில்
நொடிப்பதோர் அளவில் ஆங்கே
அவர்கள்தாம் புலையர் போலும்
அரங்கமா நகரு ளானே.''

இத்தகைய புரட்சி ஆழ்வாரின் அடிப்பொடியை நாமும் சூடி நல்லறிவு பெற்று வாழ்வோமாக!

*(அடுத்த இதழில் நிறைவுபெறும்)*

★★★

# திருமந்திர உபதேசம்

—திருமந்திரச் செல்வர்
டி.வி. வெங்கடராமன், இ.ஆ.ப. (ஓய்வு)

மூன்று மலங்களாலும் கட்டுப்பட்டவர்கள் சகலர்கள். மூன்று மலங்களையும் சேர்த்துப் பாசம் என்பார்கள். பாசத்தில் இருப்பது பசு. மூன்று மலங்களில், ஆணவம் மூல மலமென்றும் சகஜ மலமென்றும் கருதப்படுகிறது. அது அனாதிகாலம் தொட்டு, உயிருடன் கலந்திருப்பது. உயிருக்குத் தன்னைக் கட்டி வைத்திருக்கும் ஆணவமலத்தை அறிந்து கொள்ளாததும், அவ்வாற அறிந்து கொள்ள வேண்டுமென்ற விருப்பம் இல்லாததும் அந்த நிலையில், தன்னுடைய தன்மையை அறிந்து கொள்ள ஒரு முயற்சியும் மேற்கொள்ளாததும் ஆணவத்தினுடைய காரியமேயாகும். ஆணவத்தை ''இருள் மலம்'' என்று சான்றோர்கள் எடுத்துரைத்தார்கள். ஆணவத்தின் விளைவாக நமது உள்ளத்தில் புகுந்து கொண்டுள்ள இருளாகிய அறியாமை. பொருளின் உண்மையை மறைத்து விடுகிறது. அதற்கு மேலாக, நம்மிடையே விபரீத எண்ணங்களை ஏற்படுத்திவிடுகிறது. உண்மையைப் பொய் என்றும் பொய்யை உண்மையென்றும், தவறான எண்ணங்களைத் தருவித்து, நிலை கலங்கவைக்கின்றது. இந்த நிலையில் இருப்பவர்கள் எல்லோரும் மும்மல முடைய சகலர்கள். இவர்களைக் ''குருட்டுக்கிழவர்'' என்று அழைக்கின்றார் திருமூலர். (ஐந்தாம் தந்திரம் - சத்தி நிபாதம் : மந்தம்)

ஆணவ மலத்துடன், வினையும் மாயையும் சேருகின்றன. ஆணவத்தினால் தன் முனைப்பு என்ற எழுச்சி ஏற்படுகிறது. உயிர், உடல், கருவி, கரணங்களைப் பயன்படுத்திக் கொண்டு, செயல்பாட்டில் இறங்கி, இன்ப துன்பங்களைத் துய்க்கிறது. வினையும், மாயையும், உயிருக்கு உலகத்தைக் காட்டி, ஒருவகையான ஒளியைத் தந்தாலும், ஆணவ இருள் எளிதில் நீங்குவதில்லை. இதுவன்றி, அறியாமையில் உழலும் உயிர், மாயையின் கவர்ச்சியில் தன்னை அடிமையாக்கி, மாயை வழியே செல்வதைத் தலையாயதாகக் கருதுகிறது. மாயையின் ஆற்றல் அத்தகையது!

''ஆறுகோடி மாய சத்திகள்
வேறுவேறு தம் மாயைகள் தொடங்கின''

என்றார் மாணிக்கவாசகப் பெருந்தகை. (திருவாசகம் : போற்றித் திரு அகவல்)



இவ்வுலகத்தில் பிறந்து, இறக்கும் மனிதர்கள் மட்டும் சகலர்கள் அல்லாத விண்ணுலகவாசிகளும் அவ்வாறே. தாம் செய்த சிவ புண்ணியங்கள் காரணமாக, சில உயிர்கள் விண்ணுலகத்தில், போகமும், அதிகாரமும் பெற்று, சில காலம் அங்கு இருந்து விட்டு, எஞ்சிய வினைகளைக் கழிக்க இம்மண்ணுலகத்திற்கு வந்து, மீண்டும் பிறப்பெடுத்தாக வேண்டும். பசுத்தன்மை நீங்கி, பாசம் ஒழிந்தால் மட்டுமே, உயிர்கள் உலகத்தை விட்டு, சிவத்தைப் பற்றிக் கொள்ளும். உயிர்கள் இப் பயணத்தை தொடங்குவதற்கு, சிவப் பரம்பொருளின் அருள் துணை நிற்க வேண்டும். படைப்புத் தொழிலைச் செய்யும் பிரமனும் பாசத்தால் கட்டுண்ட உயிர்களில் ஒருவனே என்பார் திருமூலநாயனார்.

''பசுப்பல கோடி பிரமன் முதலாய்ப்
பசுக்களைக் கட்டிய பாசம் மூன்றுண்டு
பசுத் தன்மை நீக்கிய பாசம் அறுத்தாற்
பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே''

(திருமந்திரம் 2406)

திருவருளின் தன்மையை அறிய விடாமல் தடுத்து நிறுத்துவது ஆணவ மலம். நமக்கு வெளியே உள்ள

இருளை நாம் தெரிந்து கொள்ளலாம். புற இருள் தன்னைக் காட்டிக் கொள்ளும். ஆனால் அக இருளாகிய ஆணவமலம் தன்னைக் காட்டிக்கொள்ளாது. தன்னையும், தனது தலைவனாகிய இறைவனையும் அறியவொண்ணாமல் செய்துவிடும். ஆணவம் உயிரின் அறிவை இந்த வகையில் மறைத்துவிடும்.

''ஒரு பொருளும் காட்டாது இருள் உருவம் காட்டும்
இருபொருளும் காட்டாது இது''

என்று உமாபதி சிவனார், திருவருட் பயன் என்ற சிறப்பான சித்தாந்த சாத்திர நூலில் இதனை எடுத்துக் காட்டுகின்றார்.

இதை மேலும் விளக்கவேண்டியதில்லை. சொற்களும் தேவையில்லை. இருள் மலமாகிய ஆணவமே, உயிரின் அறியும் ஆற்றலை மறைத்து, தன்னையே அறிந்து கொள்ள இயலாமல் செய்துவிடும்.

''பன் மொழிகள் என்? உணரும் பான்மை தெரியாத
தன்மை இருளார் தந்தது''

என்பார் உமாபதி சிவனார். (திருவருட்பயன் 26)

*மலம் நீங்கிய உயிர் வெளிப்படுத்தும் பண்புகள் தன்னிடம் இல்லையே என மனம் உருகிப் பாடுகிறார் அப்பர் பெருமான்!*

''குலம் பொல்லேன், குணம் பொல்லேன், குறியும் பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன், கோலமாய்
நலம் பொல்லேன் நான் பொல்லேன், ஞானி யல்லேன்
நல்லாரோ டிசைந்திலேன், நடுவேநின்ற
விலங்கல்லேன் விலங்கல்லா தொழிந்தேன் அல்லேன்
வெறுப்பனவும் மிகப்பெரிதும் பேசவல்லேன்
இலம் பொல்லேன், இரப்பதே ஈயமாட்டேன்
என் செய்வான் தோன்றினேன் ஏழையேனே''

*(தனித்திருத்தாண்டகம்)*

''நான் இவ்வாறு குற்றங்களையும் குறைகளையும் உடைய ஏழை ஆவேன். ஒரு நிறைவும் இல்லாத நான் இவ்வுலகில் எதற்காகப் பிறந்தேன் என்று தெரியவில்லை'' என்கிறார் திருநாவுக்கரசர். இவ்வாறு அவர் தன்னைப் பற்றிக் கூறுவது, நமக்கு அறிவுறுத்துவதற்காகவே என்பது தெளிவு.

இத்தகைய, பொல்லாத ஆணவ மலச் சூழலிலிருந்து உயிரானது வெளிவந்து, தன்னை அறிந்து கொண்டு திருவருள் துணையுடன் சிவஞானம் பெற்று, சிவப் பரம்பொருளின் திருவடிகளைச் சேர்ந்து பேரின்பத்தைத் துய்த்து வாழ வேண்டும். இத்தகைய பேற்றினை உயிர் அடைய இறைவனே துணை செய்கின்றார். சிவபெருமான் உயிரைப் படிப் படியாக வளரச் செய்து பக்குவப்படுத்தி, நற்பண்புகளையெல்லாம் உயிரோடு சேர்த்து, வினைக் கடலிலிருந்து நீங்குவதற்கு வழிவகை செய்து, உயிரைத் தனக்கு அடிமையாக்கி ஆண்டு கொள்கின்றான். இந்தப் படி நிலை வளர்ச்சியை தம்முள் முழுமையாகப் பெற்ற பேறுடையவரான அப்பர் பெருமான், தான் பெற்ற பேற்றினை அனுபவித்துப் பாடுகிறார்.

''இருளாய உள்ளத்தின் இருளை நீக்கி,
இடர் பாவம் கெடுத்து, ஏழையேனை உய்யத்
தெருளாய சிந்தைதனைத் தெருட்டித்
தன்போற் சிவலோக நெறியறியச் சிந்தை தந்த
அருளானை, ஆதி மாதவத்துள்ளானை ஆறங்க
நால் வேதத் தப்பால் நின்ற
பொருளானைப் புள்ளிருக்கு வேளூரானைப்
போற்றாதே ஆற்றா நாள் போக்கினேனே!''

*(அப்பர், ஆறாம் திருமுறை,*
*திருப்புள்ளிருக்கு வேளூர் திருத்தாண்டகம்)*

தனது அறிவு விளக்கம் பெற எல்லாவித உதவிகளையும் நல்கிய சிவபெருமானைப் போற்றாது நாட்களை வீணாகக் கழித்ததை, அப்பர் பெருமான் சுட்டிக்காட்டி உலகத்தோர் அவ்வாறு செய்யாமல், இறைவனை நினைந்து வழிபட வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறார்.

திருவருள் இங்கே மேற்கொள்ளும் பணி யாது? மும்மலம் உடைய சகலர்களைக் கரை ஏற்ற வேண்டி குருவாக வந்து, அவர்களை ஆட்கொள்வதே அவன் செய்யும் பணி. ஞானாசிரியன் சுத்த சிவமேயாகும் என்கிறார் திருமூலநாயனார். தனக்கு நிகரில்லாத சிவப் பரம்பொருள் மனதாலும், சொல்லாலும் எட்ட முடியாத நிலையில் சத், சித், ஆனந்தப் பொருளாக விளங்கும் அப்பொருள், உயிர்களின் உய்திக்காக, ''விண்ணின்று இழிந்து, வினைக்கு ஈடாய் மெய் கண்டு'', உயிர்களின் பக்குவத்திற்கு ஏற்ப, அருள் புரிந்து, நலம் செய்து குருவென நிற்கும். மலம் நீங்கியவர்கள் உள்ளத்தில் தயிரில் நெய் போல் இனிதே விளங்கி நிற்கும். திருவருள் வீழ்ச்சியின் தாக்கத்தை அனுபவிக்கும் உயிர்களுக்கு தனது ஞானத்தைத் தரும். மற்றவர்களுக்கும் குருவாகி, ஐயப்பாடுகளை நீக்கி, அத்துவசுத்தி செய்து அவர்களையும் ஆட்கொள்ளும். சிவனே குருவாக வருகிறான் என்பதும்,

குருவே சிவமென்பதும் ஒரே பொருள் உண்மையை வெளிக்காட்டுகின்றன.

''குருவே சிவமெனக் கூறினார் நந்தி
குருவே சிவம் என்பது குறித்தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே உரையுணர்வற்றதோர் கோவே''

*(திருமந்திரம் ஆறாம் தந்திரம்; சிவகுரு தரிசனம்)*

சிவப்பரம் சகலர்களுக்கு குருவாக வந்து ஆட்கொள்வான் என்பதும், பிரளயாகலருக்கு, வழிபடும் தெய்வமாகப் புறத்தே நின்று தன்னைக் காட்டும் அனுபவத்தைக் கொடுப்பான் என்பதும், விஞ்ஞான கலருக்கு உள் நின்று உணர்த்துவான் என்பதும் சைவ சித்தாந்த சாத்திரக் கோட்பாடுகள். குருவாக வருவான் என்பது பொதுவாகப் பேசப்படுகின்ற அவதார மாகாது. அவதாரம் என்பது மேலிருந்து கீழ் இறங்கும் ஒரு இயக்கமாகும். சிவப்பரம்பொருள் புறத்தேயும், அகத்தேயும் நீக்கமற நிறைந்து இருக்கின்றான் என்பதே சிவனடியார்களுடைய அனுபவ பூர்வமான சித்தாந்தமாகும். ''காயத்து நின்ற கடவுள்'' என்பார் திருமூலநாயனார். அங்கே அவன் உயிருக்கு உயிராக நிற்கிறான் என்பதும் சைவ சித்தாந்தக் கோட்பாடு ஆகும். உயிரின் படிநிலை வளர்ச்சிக்கு ஏற்ப, மலங்களின் வலிமை குன்றுகிறது. உலகப் பொருள்களின் மீது பற்று குறைகிறது. புண்ணியமும் பாவமும் ஒரே கண்ணோட்டத்தில் பார்க்கப்படுகின்றன. இறைவனது அருட் சத்தி வெளிப்படத் தொடங்குகிறது. இதுகாறும் உயிரின் மையத்தில் வீற்றிருந்து சிவபெருமான் சுடர் விடும் சோதியாக மேலும் எழுந்து, உயிரைத் தனது மையமாகக் கொள்கிறான். அந்தச் சோதி, உள்ளத்தையும் கருவிகளையும், அத்துவாக்களையும் தூய்மை செய்து புறத்தே குருவாகத் தோற்றம் அளித்து நிற்கிறது.

''அருபரத்தொருவன் அவனியில் வந்து
குருப ரனாகி அருளிய பெருமை''

என்றார் மணிவாசகப் பெருமான். அவர் கண்ட உண்மை இதோ!

''மாறி நின்று என்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழி அடைத்த அமுதே,
ஊறி நின்று என்னுள் எழும் பரஞ் சோதி
உள்ளவா காண வந்து அருள்வாய்''

*(திருவாசகம் : கோயில் திருப்பதிகம்)*

மூவகை மலங்களையும் முழுமையாகக் கொண்ட சகலருக்கு உண்மை அறிவு ஊட்டுவது என்பது கடினமான பணியாகும். விபரீத ஞானத்தில் உழன்று கொண்டிருப்பவர்கள் மேல் நெறிகளை எளிதில் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். உயிரின் வளர்ச்சி படிப்படியாகவே நிகழ வேண்டும். ஒரு நிலை வந்தடைந்த பிறகு, மேலும் எவ்வழி செல்வது என்று திகைத்து நிற்கும்போது இறைவன் குருவாக எழுந்தருளும் தோற்றம் தென்படுகிறது.

உயிர் தன் உண்மையைத் தெரிந்து கொள்ளாமல் பொருளைச் சார்ந்து நின்றது. இறைவன் குருவாக வந்து ஆட்கொள்ளும்போது, உயிர் சிவத்தோடு கூடி நிற்கும் இயற்கை நிலையைப் பெறுகிறது.

அரசகுமாரன் ஒருவன் சிறு வயதிலேயே வேடர் கூட்டத்தில் அகப்பட்டு வேடர்களைப் போலவே அவர்களுக்கு உரிய தொழிலைச் செய்து கொண்டிருந்தபோது, அரசன், தனது மகனைக் கண்டுபிடித்து அவனை சந்தித்து, உண்மையை உணர்த்தியபோது அரசகுமாரன் வேடர் கூட்டத்தை விட்டு, அரசனுடன் சேர்ந்து, எல்லா நலன்களையும் பெற்றான். அது போலவே, உயிர் ஐம்புலன்களுடைய இயக்கத்தில் ஈடுபட்டு, சிவனை அறிந்து கொள்ளாமல் வாழ்ந்து வரும்போது, அது முன்னம் பிறவிகளில் செய்த தவத்தின் காரணமாக, பக்குவம் பெற்று உலகப் பற்றினை விட்டு, குருவின் திருவடிகளை சாரும். இந்த அரிய கல்வியை நமக்கு போதிப்பது, மெய்கண்டதேவ நாயனார் அருளிச் செய்த சிவஞான போதத்தின் எட்டாவது சூத்திரமாகும்.

''ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து எனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தின் உணர்த்த, விட்டு
அன்னியம் இன்மையின் அரன் கழல் செலுமே''

சிவபெருமான், உயிருக்கு மேலான ஞானத்தை போதிப்பதற்காக, குரு வடிவம் கொள்வதை ஒரு மானைப் பிடிக்க வேறொரு மானைப் பயன்படுத்துவது போலாகும் என்பர் சான்றோர்கள்.

ஞானாசிரியன் நம்மைப் போன்று இருக்கலாம். ஆனால் அவன் குற்றமற்றவன். அவன் போட்டிருப்பது ஞானச் சட்டை. அவன் தளை, உயிர் ஆகியவற்றின் இயல்பை தெளிவிக்கின்றான். அவ்வாறே, உயிரைப் பிணைத்திருக்கின்ற பாசத்தை விலக்குகிறான். உடம்பின் மேல் உள்ள ஈடுபாட்டினைத் தவிர்க்க வழிகளைப் போதிக்கின்றான். முத்தி அனுபவத்தை இவ்வுலகிலேயே கூட்டுவிக்கின்றான். இவற்றைச் செய்யும் ஞானாசிரியன் சிவபெருமானன்றி வேறு யாராக இருக்க முடியும் என்பார் திருமூலர் பெருமான்.

★★★

''பாசத்தைக் காட்டியே கட்டுப்பறித்திட்டு
நேசத்த காயம் விடுவித்து நேர் நேரே
கூசற்ற முத்தியிற் கூட்டுதலால் நாட்டகத்
தாசற்ற சத்குரு அப்பரமாமே''

(திருமந்திரம் ஆறாம் தந்திரம்
சிவகுருதரிசனம்)

ஞானாசிரியன் சீடனது உள்ளத்தில் சிவ பெருமான் மீது அன்பினை வளர்க்கின்றான். அவனுடைய திருவடியைப் பற்றிக் கொள்ள உதவுகிறான். தனது தூய்மையான வாக்கால், சீடனின் ஐயப்பாடுகளைப் போக்குகின்றான். பதி, பசு, பாசம் எனப்படும் முப்பொருள் உண்மையைத் தெளிவித்து, அவற்றின் இயல்பை உணர்த்துவதன் மூலம், சீடனுக்கு எல்லா விதமான ஞானங்களையும் அருளிச் செய்கிறான். இவ்வாறு மேல்நெறிகளை எல்லாம் கற்பித்து, இனிய நலன்களையெல்லாம் தடையின்றி நல்கும் ஞானாசிரியர்ன் பால் அளவற்ற அன்பும் நன்றியுணர்வும் கொண்ட சீடன் அவனைச் சிவபெருமானாகவே கண்டு, தெளிவடைவதில் வியப்பு ஒன்றும் இல்லை. இது திருமூலர் பெருமான் அறிவிக்கும் உண்மையாகும்:

''பத்திப் பணித்து பரவும் அடி நல்கிச்
சுத்த உரையால் துரிசறச் சோதித்துச்
சத்தும், அசத்தும் சதசத்தும் காட்டலால்
சித்தம் இறையே சிவகுருவாமே''

(திருமந்திரம், ஆறாம் தந்திரம்
சிவகுரு தரிசனம்)

ஞானாசிரியனை ஊனக்கண்களால் பார்ப்பவர்கள் அவனை நம்மில் ஒருவராக எண்ணுவர். ஞானக் கண்ணால் பார்க்கும் ஆற்றலுடையோர், ஞானாசிரியனை சிவபெருமான் என்று அறிந்து அவனுடைய திருவடிகளை வணங்கி நிற்பார்கள்.

''பொய்த்தகு கண்களால் நமர் என்பர், புண்ணியர்
அத்தன் இவனென்று அடிபணிவாரே''

(சிவகுரு தரிசனம்)

ஞானாசிரியனிடமிருந்து சீடன் பெறுவது முடிவான ஞானமும், வீட்டுப்பேறும், மெய்ம்மையும், மாறாத அருள் நிலையும், மயக்கத்தை நீக்கும் உண்மை உணர்வும், வேதங்களின் உட்பொருள் விளக்கமுமாகும். சிவபெருமானே ஞானாசிரியன் உருவில் வந்து அருளாவிடில், இவற்றையெல்லாம் உணர்ந்துகொள்ள இயலுமா? இயலாது. இதுவும் திருமந்திர வாக்கு:

''திருவாய சித்தியும், முத்தியும் சீர்மை
மருளா அருளும் மயக்கலும் வாய்மைப்
பொருளாய வேதாந்த போதமும் நாதன்
உருவாய் வராவிடில் ஓரவொண்ணாதே''

(திருமந்திரம், சிவகுரு தரிசனம்)

திருக்கைலாயத்தில் திருமூலர் பெருமான் நந்திகள் நால்வருடனும், சிவயோக மாமுனிவர், பதஞ்சலியார், வியாக்ரமர் ஆகியவர்களுடனும் நந்தி பெருமானிடம் சீடர்களாக இருந்து கல்வி பெற்றார். வேதங்களையும், ஆகமங்களையும், திரிபு அறக் கற்றுக் கொண்டார். நான்மறை யோகிகளில் ஒருவரானார். பரம்பொருளை நாடினார். நாதாந்தம், கலாந்தம், போதாந்தம், வேதாந்தம், சித்தாந்தம் ஆகியவற்றின் அனுபவங்களை முழுமையாகப் பெற்றார். கூத்தப்பிரானின் ஐந்தொழில் இயக்கத்தின் தத்துவ நுட்பங்களைத் தெரிந்துகொண்டார்; திருவருள் துணையுடன் மெய்ஞ்ஞானத்தை உணர்ந்து கொண்டார்.

இவ்வளவும் தனக்கு வாய்த்தது தனது குருவின் அருளால்தான் என்று தெரிந்து கொள்கிறார். அது மட்டுமல்ல, தான் பொதுவாகத் தெரிந்து கொண்ட எல்லா பொருள்களுக்கும் ஒரு சிறப்புத் தன்மை உண்டு என்றும் உணர்ந்து கொள்கிறார். திருவருளால் உந்தப்பட்டு, சிவபெருமானின் இயல்பை கேட்டல் ஞானத்தின் வழி தெரிந்து கொள்கிறார். நூல்களை ஓதினார். திருவருள் கிடைக்கப் பெற்றார். பற்றுகளை விட்டார். உடம்பும், அதனுடைய கருவிகளும் தானல்ல என்று தெரிந்துகொண்டார். சிவன் செயல் யாவையும் நோக்கி நின்றார். இந்த நற்பயன்களெல்லாம் குருவருளாலே தான் கிடைத்தன என்றும் திருமூலர் பெருமான் கூறுகின்றார்.

''அறிந்துணர்ந் தேன் இவ்வகலிடம் முற்றும்
செறிந்துணர்ந் தோதித் திருவருள் பெற்றேன்
மறந்தொழிந் தேன் மதிமாண்டவர் வாழ்க்கை
பிறிந்தொழிந் தேன் இப்பிறவியை நானே''

(திருமந்திரம், சிவகுரு தரிசனம்)

எண்ணற்ற நற்பயன்களை நமக்கு அளிக்க இறைவன் காத்துக் கொண்டிருக்கின்றான் என்பதே உண்மை. அவற்றைப் பெற நாம் தகுதியுடையவர்களாக வேண்டும். ஒரு சற்குரு நமக்குக் கிடைக்கும்போது நாம் நற்சீடராக வேண்டும். பக்குவமும், திருவருளைப் பெற தீவிரமான விருப்பமும் இருக்க வேண்டும். பக்குவன் யார் என்று மேலும் சிந்திப்போம்.

★ ★ ★

# பாவ புண்ணியங்கள்

- திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப. (ஓய்வு)

★ தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளின் நலனுக்கும் தாய்க்கும் உள்ள சம்பந்தம் போன்றே சிறிதளவே மூதாதையர்கள் செய்த பாவ புண்ணியங்கள் சந்ததி களைப் பாதிக்கின்றன.

★ கெட்ட எண்ணம் பாவச்செயல் என்றாலும் உடலால் செய்யும் கெட்ட செயல் மட்டுமே விபரீத விளைவுகளை ஏற்படுத்தும்.

★ சுயநலம் விரோதிகளைச் சம்பாதிக்குமாதலால் ஆபத்துக் காலத்தில் உதவி கிடைக்காமல் செய்து விடும். சுயநலம் ஒருவகையான பாவச் செயலாகும்.

★ இன்னொருவனுக்குக் கெடுதல் செய்வது, தான் கொடிய விஷம் அருந்துவதற்கு ஒப்பானது என்று தெரிந்து தெளிவு பெற்றால் பாவம் செய்வது குறைந்துவிடும்.

★ மனிதனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஞானேந்திரி யங்களில் அதிகம் பாவச் செயலைச் செய்வது கண். ஆனால் உலகியல் சட்டம் தண்டிப்ப தில்லை. இறைவன் கொடுக்கும் தண்டனையி லிருந்து தப்பாது.

★ பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும் என்பதுபோல் ஒருவனுக்குத் தொடர்ந்து துன்பம் நேர்ந்தால் துவள வேண்டியதில்லை. ஏனென்றால் அவனுடைய பாவங்கள் விரைவில் கழிகின்றன என்பதுதான் உண்மையாகும்.

★ பாவம் இரும்பு விலங்கு, புண்ணியம் பொன் விலங்கு என்றால் இரண்டும் ஒன்று என்று நினைத் துப் பாவத்தைச் செய்யக்கூடாது. பாவத்திற்குப் பயண ஆரம்பத்திலேயே தடை ஏற்படுகிறது. புண்ணியத்திற்கு பயணம் முடிகின்ற நேரத்திலே தடை ஏற்படுகிறது. புண்ணியம் செய்தவன் விரைவில் தடையை உடைத்து இலக்கை அடைந் திடுவான்.

★ நாம் பாவச் செயல்களையும் புண்ணியச் செயல் களையும் செய்து செய்து பல்வேறு பிறவிகள் எடுக்கும்பொழுது பிரமனை அலுத்துப் பயன் இல்லை. நாமே அலுத்து பிறவியைக் கடக்கும் முயற்சியில் ஈடுபட்டால் முடிவில்லாமல் செல்லும் பிறவியை முடிவுக்குக் கொண்டு வரலாம்.

★ ஒரு பொருள் நமக்கு வேண்டுமென்றால், அதற் குரிய விலையைக் கொடுத்தால்தான் கிடைக்கிறது. அதுபோல் நம்முடைய துன்பத்தை விற்க வேண்டு மென்றால் அதற்குரிய விலையாக இறைவனிடம் அன்பு செலுத்த வேண்டும். துன்பத்தை பாவம் என்ற விலையைக் கொடுத்து வாங்கியதால் அன்பு என்ற விலையைக் கொடுத்து விற்க வேண்டியிருக் கிறது.

★ ஒருவன் துன்பப்படும்பொழுது அவன் செய்த பாவம்தான் இதற்குக் காரணம் என்று அவனிடம் குத்திக் காட்டுவது நாம் செய்யும் பாவச் செயல் என்று அறிய வேண்டும்.

★ ஏற்பது இகழ்ச்சி என்பதால் கேளாமலே வசதி மிக்கவன் மற்றவனுடைய அத்தியாவசியத் தேவை யைப் பூர்த்தி செய்வது மகாபுண்ணியம்.

★ பயத்தினாலும் பாதுகாப்பிற்காகவும் கொடுக்கப் படும் நன்கொடை தர்மத்தின் பகுதியாகக் கருதப் படுவதில்லை என்றாலும் இவர்கள் நன்கொடை யில் மற்றவர்கள் பயனடைகிறார்கள்.

★ புகழுக்காகவும் பெருமைக்காகவும் ஒருவன் தான தர்மம் செய்தாலும் அதைப் பழிக்கக்கூடாது. இறைவன் அவர்களைப் பயன்படுத்திக் கொள் கிறார் என்பதுதான் உண்மை.

★ பிறர் பொருளுக்கு சிறிதளவு கூட ஆசையில் லாமல் இருந்தாலும், தன்னிடம் அதிக அளவு பொருளிருந்து சிறிதளவு கூட தகுதியுள்ள பிறருக்கு ஈயாமல் இருப்பதுவும் ஒருவகையில் பாவமே.

★ நம்மிடம் யாராவது எதையாவது எதிர்பார்த்தால் இயலும் பட்சத்தில் அவர்களை ஏமாற்றமடையச் செய்யக்கூடாது. ஏமாற்றாமல் கொடுத்து தர்மத்தின் பலனைப் பெறலாம்.

# அன்னை திருப்பாதம்

- கவிஞர் பி.கே. சந்திரசேகரன்



விரிந்த மலர்ப்பாதம் விண்ணவரும்தொழும் பாதம்
பறித்திட்ட உள்ளமதில் பதிந்திட்டதோர் பாதம்
சரிக்குச் சரியாய்ச் சங்கரனின் ஓர் பங்கைத்
தரிக்கின்ற தாயாகித் தண்ணருளைத் தரும்பாதம்

அறியாமை இருள் நீக்கும் அருட் பெருஞ் சோதியதாய்
குறிப்பறிந்து குறை தீர்க்கும் குமுதமலர்ப்பாதம்
அரி அயனும் அமரர்களும் அடைதற்கு வொண்ணாது
அழுவார்க்கு அருள்நல்க ஆடிவரும் பாதம்

தாமரைக்குப் பெரும்புகழை ஈட்டித்தரும் பாதம்
மாமறையின் முடிகளெல்லாம் போற்றித்தொழும் பாதம்
பாமரர்க்கும் பக்திரசம் ஊட்டித் தரும் பாதம்
மாமதுரை நகர் வாழும் மரகதத்தாய்ப் பாதம்

சங்கம்வளர்த்த தமிழ்த் தாயவளின் பாதம்
மங்கையர்க்கரசியவள் மலரினும் மென்பாதம்
சிங்கார வீதிகள் சூழ் தென்பாண்டி நாட்டில்
அங்கையற் கண்ணிஎன ஆட்சிசெயும் பாதம்

ஏழையரின் சுமையெல்லாம் இறக்கிவைக்கும் பாதம்
கோழையரின் மனமெல்லாம் கோயிலாக்கும் பாதம்
தாழப் பணிவோர்க்கே தயைபுரியும் பாதம்
தாயாகித் தரணியெலாம் தாங்குகின்ற பாதம்

அன்னை மீனாட்சி அருட் கமலப் பாதம்
ஆறுமுகக் கவிராசன் அன்பு செயும் பாதம்
பின்னையும் தொடர்ந்திடாது பிறப்பறுத்து நம்மைப்
பேரின்ப நல்வீட்டில் போற்றி வைக்கும் பாதம்.

★★★

---

★ தரும சிந்தனை உள்ளவர்களிடம் திரும்பத் திரும்பக் கேட்டு அவர்கள் தங்கள் இயலாமையைத் தெரிவிக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தக் கூடாது.

★ மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான் என்று சொல்வார்கள். அந்த அளவிற்கு நம் முன்னோர்கள் இறைவன் மீது நம்பிக்கை வைத்திருந்தார்கள். யாரும் பட்டினியால் வாடக்கூடாது என்று கருதி தானத்தில் சிறந்ததான அன்னதானத்தை செயல்படுத்தி வந்தார்கள். பகவத் சிந்தனையுள்ளவர்கள், வசதியுள்ளவர்களில் சிலர் பசியில் வாடும் ஏழை எளியவர்களுக்கு அன்றுபோல் இன்றும் உறுதுணையாக இருக்கிறார்கள்.

★ வசதியுள்ளவர்கள் பசியைப் போக்குவதற்கான வாய்ப்பினை இறைவன் வசதியுள்ளவர்களுக்கு அளித்திருக்கிறார். வசதியுள்ளவர்கள் இதனைப் பயன்படுத்திக் கொண்டால் ஆன்ம லாபம் அடைவார்கள்.

★★★

# மகாமகம் - 2004

- ப. தனபால், எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் (திருப்பணி)
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை - 600 034.

கங்கையும் யமுனையும் சரசுவதியும் ஒன்று கூடுகின்ற திரிவேணி சங்கமத்தில் ஆண்டுதோறும் கும்பமேளா என்ற தீர்த்தவிழா நடக்கிறது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பமேளா நடக்கிறது. அச்சமயம் லட்சக்கணக்கான மக்களும் சாதுக்களும் வந்து அங்கு நீராடுகிறார்கள். அது போலவே தென்னாட்டிலும் கும்பகோணத்தில் ஆண்டுதோறும் மகநீராட்டு விழா நடைபெறுகிறது. 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மகாமகத் தீர்த்தவிழா நடைபெறுகின்றது. இச்சமயத்தில் லட்சக்கணக்கான பக்தர்கள் வந்து இங்கு நீராடுகிறார்கள். வடநாட்டில் திரிவேணி சங்கம தீர்த்தமும், தென்னாட்டில் மகாமகத் தீர்த்தமும் 12 ஆண்டுக்கு ஒருமுறை மகோன்னத மான பலனைத் தருகின்றன.

குரு பகவான் சிம்ம ராசியில் மக நட்சத்திரத்தில் இருக்கவும், சூரிய பகவான் கும்ப ராசியில் சஞ்சரிக்கவும், சந்திர பகவான் பூர்ணமாய் நிறையவும் வருகின்ற நாளே ''மகாமகம்'' என்ற புண்ணிய நாளாகும். இது 12 ஆண்டுக்கு ஒருமுறை தான் ஏற்படும். இந்த நன்னாளில் கங்கை, யமுனை, சரசுவதி, கோதாவரி, துங்கபத்திரை, காவேரி, நருமதை, தாமிரவருணி, குமரி என்ற ஒன்பது தீர்த்த மாதர்கள் மகாமகத் தீர்த்தத்தில் நீராட வருகிறார்கள் என்பது ஐதீகம். எனவே இந்தத் தீர்த்தங்கள்தோறும் சென்று நீராட முடியாதவர்கள் இம்மகாமகத் தீர்த்தத்தில் நீராடினால் ஒன்பது தீர்த்தங்களிலும் நீராடிய பலனை ஒரே காலத்தில் ஒரே இடத்தில் பெறமுடிகிறது. ஆகவேதான் இப்புண்ணிய தீர்த்தத்தில் லட்சக்கணக்கான பக்தர்கள் நீராடுகிறார்கள்.

ஆண்டுதோறும் பல தலங்களில் மக நீராட்டு விழா நடைபெறுகிறது. ஞானசம்பந்தர் காலத்தில் மயிலாப்பூரில் மாசி மாதத்து மகத்தில் கடலாட்டு நடந்து வந்திருக்கின்றது. இதனை ஞானசம்பந்தர் தமது பாசுரம் ஒன்றில் 'மடலார்ந்த தெங்கில் மயிலையார் மாசிக், கடலாட்டுக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்' என்று பாடியுள்ளார். ஆனால் 12 ஆண்டுக்கு ஒருமுறை நடக்கும் மகாமகம் கும்பகோணத்தில் மட்டுமே நடைபெறுகிறது. இந்நாளில் நவ தீர்த்தங்கள் வந்து சேருகின்றன என்பதை குறிப்பாகத் திருநாவுக்கரசர் குடந்தைக் கீழ்க்கோட்டம் பாசுரத்தில் கூறியுள்ளார். அப்பாசுரம் வருமாறு :

ஏவியிடர்க் கடலிடைப்பட் டிளைக்கின் றேனை
இப்பிறவி யறுத்தேற வாங்கி ஆங்கே
கூவியம ருலகனைத்தும் உருவிப் போகக்
குறியில்அறு குணத்தாண்டு கொண்டார் போலும்
தாவிமுதற் காவிரிநல் யமுனை கங்கை
சரசுவதிபொற் றாமரையும் கரணி தெண்ணீர்க்
கோவியொடு குமரிவரு தீர்த்தம் சூழ்ந்த
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெம் கூத்தனாரே.

இந்தியாவில் ஹரித்துவார் (Haridwar) பிரயாகை (Prayag) வாரணாசி (Varanasi) ராஜமுந்திரி (Rajamundry) மற்றும் விஜயவாடா (Vijayavada) ஆகிய இடங்களில் உள்ள ஆறுகளில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் கும்பமேளா தினத்தில் புனித நீராடுதல் நடைபெறுகிறது. அதேபோல் குருக்ஷேத்திரா (Kurukshetra), உஜ்ஜயினி (Ujjaini)மற்றும் கும்பகோணம் ஆகிய இடங்களில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை புனித குளத்தில் புனித நீராடுதல் நடைபெறுகிறது. எனவே புனித ஆற்றில் கும்பமேளாவும், புனித குளத்தில் மகாமகமும் நடைபெறுகின்றது. மேற்கண்ட நிலையில் கும்பகோணம் நகரில் நடைபெறும் மகாமகத் திருவிழாவை வடநாட்டில் நடைபெறும் கும்பமேளாவிற்கு ஒப்பிடலாம்.

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மாசி மாதத்தில் சூரியன் கும்ப ராசியிலும், குருபகவான் சிம்ம ராசியிலும் வரும்போது பௌர்ணமியில் மக நட்சத்திரமும் ரிஷப லக்னமும் கூடிய நன்னாளில் மகாமக குளத்தில் தீர்த்தவாரிப் பெருவிழா நடைபெறும். இந்த மகாமகப் பெருவிழா அன்று கும்பகோணம் மாநகரில் அமைந்துள்ள 12 சைவத் திருக்கோயில்களின் உற்சவமூர்த்திகள், மகாமகக் குளத்திலும், 5 வைணவத் திருக்கோயில்

களின் உற்சவ மூர்த்திகள், காவிரி ஆற்றங்கரையிலும் எழுந்தருளிப் பக்தர்களுக்கு தீர்த்தவாரி காட்சி அளிப்பது வழக்கம்.

கடந்த 1992 - பிப்ரவரி 18-ல் நடைபெற்ற மகாமக பெருவிழாவை தொடர்ந்து வருகின்ற 2004-மார்ச் 6-ம் நாள் மகாமகப் பெருவிழா நடைபெற உள்ளது. இப்பெருவிழாவின் போது மகாமகத் திருக்குளத்தில் தீர்த்தவாரிக்கு கீழ்க்கண்ட சிவ ஆலயங்களிலிருந்து உற்சவ மூர்த்திகள் புறப்பட்டு ஊர்வலமாக வந்து திருக்குளத்தினை அடைந்து தீர்த்தவாரி நடைபெறும்.

அருள்மிகு

1. காசிவிஸ்வநாதர் ஆலயம், கும்பகோணம்.
2. ஆதிகும்பேஸ்வரர் ஆலயம், கும்பகோணம்.
3. நாகேஸ்வரர் ஆலயம், கும்பகோணம்.
4. சோமேஸ்வரஸ்வாமி ஆலயம், கும்பகோணம்.
5. ஆதிகம்பட்ட விஸ்வநாதர் ஆலயம், கும்பகோணம்.
6. காளஹஸ்தீஸ்வரஸ்வாமி ஆலயம், கும்பகோணம்.
7. பாணபுரீஸ்வரர் ஆலயம், கும்பகோணம்.
8. அபிமுக்தீஸ்வரர் ஆலயம், கும்பகோணம்.
9. கௌதமேஸ்வரர் ஆலயம், கும்பகோணம்.
10. ஏகாம்பரேஸ்வரர் ஆலயம், கும்பகோணம்.
11. கோடீஸ்வரர் ஆலயம், கொட்டையூர், கும்பகோணம்.
12. அமிர்தகலசநாதஸ்வாமி ஆலயம், திருக்கலசநல்லூர்.

அதே நாளில் காவிரி ஆற்றின் கரையிலும் (சாரங்க பாணி சுவாமி தீர்த்தவாரி மண்டபம்) கீழ்கண்ட வைணவ ஆலயங்களிலிருந்து உற்சவ மூர்த்திகள் புறப்பாடு செய்யப்பட்டு ஊர்வலமாக சென்று தீர்த்த வாரி நடைபெறும்.

அருள்மிகு

1. சாரங்கபாணிஸ்வாமி ஆலயம், கும்பகோணம்.
2. சக்கரபாணிஸ்வாமி ஆலயம், கும்பகோணம்.
3. வரதராஜபெருமாள் ஆலயம், கும்பகோணம்.
4. ராஜகோபாலஸ்வாமி ஆலயம், கும்பகோணம்.
5. இராமசுவாமி ஆலயம், கும்பகோணம்.

மகாமகத் திருக்குளத்தைச் சுற்றி பதினாறு சிறு கோயில்கள் அமைக்கப்பட்டு சிவலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப் பெற்றுள்ளதை சோடசமகா லிங்கஸ்வாமி என்று அழைக்கப்படுகின்றது. அந்தச் சிவலிங்கங்களின் பெயர்களாவன:

1. பிரமதீர்த்தேஸ்வரர்
2. முகுந்தேஸ்வரர்
3. தனேஸ்வரர்
4. விருஷபேஸ்வரர்
5. பாண ஈசுவரர்
6. கோண ஈசுவரர்
7. பக்திஹேஸ்வரர்
8. பைரவேஸ்வரர்
9. அகத்தீஸ்வரர்
10. வியாசேஸ்வரர்
11. உமாபாகேஸ்வரர்
12. நிருதீஸ்வரர்
13. பிரமேஸ்வரர்
14. கங்காதரேஸ்வரர்
15. முக்தி தீர்த்தேஸ்வரர்
16. சேத்திரபாலேஸ்வரர்

கும்பகோணம் நகரிலும், நகரைச் சுற்றிலும் கீழ்க்காணும் முக்கிய ஆலயங்கள் உள்ளன.

### 1. அருள்மிகு பாணபுரீஸ்வரர் திருக்கோயில், கும்பகோணம் நகர்

கும்பகோணம் நகரின் கீழ்ப்பாகத்தில் பாணா துறை எனும் இடத்தில் அமைந்துள்ள சிவாலயம் இது. புராணத்தில் முதன்மையாகக் கூறப்படும் சிறந்த கோயில். உலகப் பிரளயம் தோன்றிய காலையில் கைலாசநாதனாகிய சிவபெருமான் வேடனுருக் கொண்டு பாணம் விடுத்து கும்பத்தில் அடங்கியிருந்த அமுதத்தை வெளிப்படுத்திய இடமாகையால் இவ் விடம் பாணபுரீஸ்வரர் எனவும், இறைவன் திருநாமம் ஸ்ரீ பாணபுரீஸ்வரர் எனவும், இறைவியின் திருநாமம் ஸ்ரீ சோமகலாம்பிகை எனவும் அமைந்து விளங்கு கின்றன. உலக அழிவைச் சிவனருளால் தடுத்து நிறுத்திய உன்னதத் தலம் இது. மகாபாரதம் எழுதிய வியாசபகவானின் விசாரம் நீக்கிய வரலாறு இறை வனின் சிறப்பினைச் செப்பி நிற்கிறது.

### 2. அருள்மிகு ஆதிகும்பேஸ்வரர் திருக் கோயில், கும்பகோணம் நகர்

உலக மகாபிரளயம் தோன்றியபோது அமுத கலசம் ஒன்றினைத் தென்புலம் நோக்கி, பிரளயம் அடித்துச் செல்லுங்காலைத் திருக்குடந்தை நகரில் நகராது நிற்கவும், சிவன் வேடரூபத் தாங்கி வந்து பாணம் விட்டுக் குடத்தை உடைக்கவே அக்கலசத் தில் உள்ள அமுதம் கலந்து பிசைந்துள்ள பாகங்கள் லிங்கவுருவாய் மாறி நின்றது என்ற புராண வரலாறு உள்ளது. அச்சிவலிங்கத்தில் ஈசன் உறைந்து காட்சி அளிக்கலானார் - கும்பத்தினின்றும் தோன்றிய ஈசனைக்

கும்பேசுவரர் எனப் போற்றித் துதிக்கலானார்கள். இவரே ''ஆதிகும்பேஸ்வரர்''.

அன்னையானவள் ஆண்டவன் இருப்பிடம் நாடி வந்தாள். பிரளய வேகத்தில் 51 மந்திர பீடங்களும் ஈசனண்மையில் வரவும் அன்னையை அம்மந்திர பீடத்தின் அருகில் இடப்பாகத்தில் அமருமாறு ஆணையிட்டார் ஆண்டவன். அன்னையும் நீர் நிறைந்த கிண்டியுடன் ஈசன் அருகில் அமர்ந்து உலக மறு பிறப்புக்கு அர்க்கியம் செய்தாள். இவ்வாறு உலக அழிவைத் தவிர்த்து உய்வித்த உற்சாகப் பெருக்கில் படைப்புக் கடவுள் பிரம்மா மந்திரபீடம் ஏறிய அன்னையை மங்களேஸ்வரியாக விளித்து அவ் வன்னை சமேதராகிய ஸ்ரீ கும்பேஸ்வரருக்குத் திருக் கோயில் எழுப்பி மாசி மக நன்னாளில் பிரமோத்சவம் செய்து மகாமகக் குளத்தில் புனித நீராடச் செய்தார் எனப் புகழ்பாடுகிறது புராணம்.

### 3. அருள்மிகு சாரங்கபாணிசுவாமி திருக்கோயில், கும்பகோணம் நகர்

மகாவிஷ்ணுவினுடைய ஆலயங்களில் மிகப் பெரியது இக்கோயில். நகரின் மத்தியிலே கம்பீர முடன் காட்சிதரும் கோயில். 147 அடி உயரமுள்ள கோபுரம் உள்ளது. இதனில் ஐந்து சிறு கோபுரங்களும், பின்புறத்தில் பொற்றாமரைக் குளமும் அமைந்து இதன் எழிலுக்கு எழில் ஊட்டுகிறது. ஏழு ஆழ்வார் களால் பாடப்பெற்றது.

### 4. அருள்மிகு காசி விஸ்வநாதசுவாமி திருக்கோயில், கும்பகோணம் நகர்

எல்லாத் தலங்களிலும் ஏற்றம் விசுவேசம், எல்லாத் தீர்த்தங்களிலும் ஏற்றம் மக தீர்த்தம், எல்லா மூர்த்திகளுக்கும் ஏற்றம் இம்மூர்த்தி என்ற கீர்த்திப் பெற்றது.

கங்கை, யமுனை, நர்மதை, சரஸ்வதி, காவேரி, கோதாவரி, கிருஷ்ணா, துங்கபத்ரா, சரயு ஆகிய புண்ணிய நதிகள் ஒன்பதும், நவ கன்னியர் ரூபத்துடன் எம்பெருமான் சிவனிடம் அணுகி, நாங்கள் மனிதர்கள் நீராடுதலால் பாபச் சுமைகளை தாங்கி வருவதால் அவற்றை தீர்த்தருள விண்ணப்பிக்கவும், சிவபிரான் அருள் செய்தவாறு : ''நீவீர் கும்பகோணம் என்னும் திருத்தலம் உள்ளது. அது நமது கயிலையை விடச் சிறந்தது. அந்த நகரின் தென்கிழ்த் திசையில் ஓர் தீர்த்தமுண்டு. அதில் சிம்ம ராசியில் குருவிருக்கும் ஆண்டில் மாசித் திங்களில் மக நல்லோரையில் நீராடினால் உங்களுடைய பாபம் தீரும்: புண்ணியம் கிட்டும்'' என உரைக்கலுற்றார். இதனைக் கேட்ட நவகன்னியர்கள் மகிழ்ச்சியுற்று வேண்டுவராயினர். ''யாம் அத்தீர்த்தம் இருக்கின்ற இடம் அறியோம்''; ஆகவே தாங்கள் தெரிவித்தருள வேண்டும்'' எனவும் கயிலையம்பதியும், ''நீவிர் காசியில் காத்திருங்கள். யாமே தோன்றி அழைத்துப் போவோம்'' என்று அருள் புரிந்தனர். அவ்வாறே காசியில் தங்கியிருந்த நவ கன்னியர்களையும் அழைத்துக் கொண்டு கும்ப கோணத்திற்கு எழுந்தருளி ஸ்ரீ ஆதிகும்பேஸ்வரரை வழிபடச் செய்து மகாமகக் குளத்தினைக் காண்பித்த பின்னர், வடகரையில் திருக்கோயில் கொண்டுறைந் தார். அந்த ஆலயமே காசி விஸ்வேசுவரர் ஆலய மாகும்.

நீராடிய நவகன்னியர்களும் பொழுது புலர்ந் தமையால் காசி விஸ்வநாதருடைய ஆலயம் சென்று விஸ்வேசுவரரின் அருளைப் பெற்று அவர்தம் காயத் துள் அடைக்கலமாயினர் என்பது புராண வரலாறு ஆகும். அதனால்தான் இத்தலம் காயாரோகணம் எனவும் பெயர் பெற்று விளங்குகிறது.

### 5. அருள்மிகு நாகேஸ்வரஸ்வாமி திருக்கோயில், கும்பகோணம் நகர்

மகாமகக் குளத்திற்கு அண்மையில் இக்கோயில் அமையப்பெற்றுள்ளது. பிரளய காலத்தில் அமுத குடம் இறைவனால் அம்பெய்து உடைக்கப்பெற்ற பொழுது அதில் இருந்து சிதறிய வில்வம் இவ்விடத் தில் சிதறி விழுந்தமையால் இத்தலம் வில்வனேசம் எனப்பட்டது. இறைவர் வில்வனேசர் என்றும் பெயர் பெற்றார். உலகைத் தாங்கி நின்றமையால் தனது வலிமையை இழந்த ஆதிசேடன், நாகங்களை அணி களாகக் கொண்ட சிவபெருமானை இத்தலத்தின்கண் வணங்கி மீண்டும் வலிமை பெற்றதால் இறைவர் நாகேஸ்வரர் எனப் போற்றப் பெற்றார்.

### 6. அருள்மிகு ராமசுவாமி திருக்கோயில், கும்பகோணம் நகர்

கும்பேஸ்வரர் கோயிலுக்கு அண்மையிலும், பிரதான கடைவீதியின் தெற்குக் கோடியிலும் அமைந் துள்ள இவ்வாலயம் தஞ்சை புரியை ஆட்சி செய்த ''ரகுநாதநாயக்கர்'' என்ற நாயக்க மன்னரால் 16 ஆம் நூற்றாண்டில் தேற்றுவிக்கப்பட்டது. கும்பகோண நகருக்கு 2 மைல் தொலைவில் உள்ள தாராசுரம் எனும் இடத்தில் உள்ள குளத்தில் ராமர், சீதை மற்றும் தேவதாமூர்த்திகளின் விக்கிரகங்களை மன்னர் கண் டெடுத்து இக்கோயிலில் பிரதிஷ்டை செய்தார் எனக் கூறுவர். எங்கும் ஸ்ரீராமர் கோதண்டபாணியாக, நின்ற திருக்கோலமாகவே இருப்பது வழக்கம். ஆயின் இங்கு

பரத, லக்ஷ்மண, சத்ருகன், ஹனுமன் ஆகியோர் சூழ சீதா சமேதராக ஸ்ரீராமர் பட்டாபிஷேக அலங்கார உருவில் காட்சி அளிக்கிறார். இக்கோயிலில் உள்ள சிற்ப மேம்பாடு வியந்து பாராட்டற்குரியது. கோயிலில் உள்ள ஒவ்வோர் தூணும் ஒரு ஒற்றைக் கல் கம்பமாகும். ஒவ்வோர் தூணிலும் நுண்ணிய வேலைப்பாடுகள் அமைந்துள்ளன. ஸ்ரீராமரின் வீரச் செயல்களும், வாமன சிற்பக் காட்சிகளும், பூதேவி ஸ்ரீதேவி சமேதராக காட்சிதரும் மகாவிஷ்ணு சிற்பங்களும் பார்த்து மகிழ்வுறத் தக்கதாக உள்ளன.

### 7. அருள்மிகு சக்கரபாணிசுவாமி திருக்கோயில், கும்பகோணம் நகர்

பொன்னி நதிக்கரைக்கு அருகில் அமைந்துள்ள தேவாலயம். சுதர்சன சக்கர ரூபத்தில் மகாவிஷ்ணு காட்சி அளிக்கிறார். கர்வத்துடன் விளங்கிய சூரிய பகவானுடைய அகம்பாவத்தை மகாவிஷ்ணு சக்கர பாணி வடிவத்தினராய் சுதர்சனமாகிய சக்கரத்தில் தம் சக்திகளை ஆவிர்ப்பவித்து அடக்கினார் எனவும் புராணக்கதை உண்டு. இக்கதையினைப் புலப்படுத்தும் வகையில் பிப்ரவரி, மார்ச் திங்களில் (மாசி மாதத்தில்) பிரமோத்சவம் நிகழ்கிறது. கையில் விளக்கேந்தி நிற்கும் தஞ்சை மன்னர் ஒருவரின் சிலை ஒன்று இக் கோயிலில் உள்ளது.

### 8. அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில், சுவாமிமலை, கும்பகோணம் வட்டம்

தமிழ்க் கடவுள் முருகன். இளமைக்கு, அழகுக்கு, மணத்துக்குத் தலைவன் முருகன். கண்கண்ட தெய்வமே கலியுக வரதன்தான். ''வேண்டிய வரம் கொடுப்பான் மெய்கண்ட தெய்வம் இத்தெய்வம் அல்லால் புவியில் வேறு இல்லை'' என்று உணர்ந்து உருகிப் பாடிச் சென்றார் குமரகுருபர சுவாமிகள்; தமிழுக்கும் தமிழக மக்கட்கும் முதல்வனான முருகன் எழுந்தருளி இருக்கும் இணையற்ற திருக்கோயில் சுவாமிநாத சுவாமி கோயிலாகும்.

சுவாமிமலை கும்பகோணத்திலிருந்து மேற்கே 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஆறுபடை வீடுகளில் நான்காம் படைவீடான சிறப்புடைய தலமாகும். ஊருக்கு தென்திசையில் காவிரி, அரிசிலாறு நதிகளால் சூழப்பெற்று, இனிய பொழில்களும் நெடிய வயல்களும் நிறைந்துள்ள வளமிக்க ஊர் இது. அறுபது படிகளைக் கொண்ட கட்டுமலைக் கோயில் இது. சுமார் 1800 ஆண்டுகளுக்கு முன்னரே நக்கீரப் பெருமான் திருமுருகாற்றுப்படை அருளிய காலத்தில் வியந்து பாராட்டிய புனிதத்தலம்.

### 9. அருள்மிகு வேங்கடாசலபதி ஆலயம், உப்பிலியப்பன்கோவில், கும்பகோணம் வட்டம்

குடந்தை நகரிலிருந்து கிழக்கே 3 மைல் தொலைவில் உள்ள மிகப் புகழ் வாய்ந்த தலமாகும் இது. திருவிண்ணகர் எனும் தனிப்பெயரும் உடையது. வைணவத் தலங்களிலே மிகவும் சிறப்புடைத்தான தலம். பொய்கையாழ்வார், பேயாழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் ஆகிய நால்வரும் பாடியுள்ள திருவாலயம். இத்திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள எம்பிரானுக்கு ''ஒப்பாரில்லப்பன்'' என்று நம்மாழ்வார் பக்தியுடன் இட்ட பெயரே ''ஒப்பிலியப்பன்'' என வழக்கில் உள்ளது. திருப்பதி வேங்கடாசலபதியைப் போன்றே இந்தத் திருத்தலத்து இறைவனும் வரப்பிரசாதியாயிருப்பதனை ஒட்டி வேங்கடாசலபதி என்ற பெயருடன் புராணங்களில் ஸ்ரீநிவாசன் என்னும் திருநாமம் கொண்டு விளங்கினார். புராண வரலாற்றின்படி இப்பெருமாளுக்கு லவணத்தில் (உப்பு) ருசியேயின்றி நைவேத்தியம் நடைபெற்று வருகின்றதால் இதனைக் கருத்தில் கொண்டு மக்கள் ''உப்பிலியப்பன்'' என்றும் பக்தியுடன் பெயரிட்டு அழைக்கின்றனர்.

### 10. அருள்மிகு வேதநாராயணப் பெருமாள் (பிரமன்) திருக்கோயில், கும்பகோணம்

எண்ணிலடங்கா ஆலயங்கள் மிகப் பெற்றுள்ள குடந்தையை ஆலயங்களின் நகரம் எனப் பெயரிட்டழைப்பது வெகு பொருத்தமுடையதாகும். மும்மூர்த்திகளான சிவன், விஷ்ணு, பிரம்மன் ஆகியோர்கட்கான ஆலயங்களில் பிரம்மனுக்கென ஆலயம் அமையப்பெறுவது பொதுவாக தமிழகத்தில் காணக் கிடைக்காத ஒன்றாகும். ஆக்கத்தின் அதிபதிக்கு கோயில்கள் தமிழ்நாட்டில் எண்ணிக்கையில் மிக மிகக் குறைவே. இதற்கான காரணம் யாதாயினும் குடந்தைத் திருநகரின் கண் அமைந்துள்ள பிரம்மன் ஆலயம் குறிப்பிடத்தக்க தொன்மையும் வரலாற்றுச் சிறப்பும் உடையது என்பது திண்ணம்.

### 11. அருள்மிகு நவக்கிரக ஆலயம், சூரியனார் கோயில், திருவிடைமருதூர் வட்டம்

கும்பகோணம் தாலுகாவில் பொன்னி நதியின் வடகரையில் உள்ள கீர்த்தி பெற்ற தலம் சூரியனார் கோயில். ஆடுதுறை என்னும் சிற்றூரிலிருந்து 2 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இத்தலத்தின் சிறப்பு நவக்கிரகங்களுக்கு பிரத்யேக ஆலயம் பெற்றுள்

ளதேயாகும். சிவாலயங்களில் நவக்கிரகங்கள் இருப் பினும், அவை மூலவர்களாக மாட்டா. இரண்டாந்தர வழிபாட்டுக்குரிய தெய்வங்களாகவே இருக்கும். இங்குள்ள தனிச்சிறப்பு சூரியன் மூலவராகவும், மற்றைய எட்டு நவக்கிரகங்களும் தனித்தனி பரிவார தெய்வங்களாகவும் கோயில்கள் கொண்டு திகழ்வது தான். தமிழகத்தில் இம்மாதிரியான ஆலயங்கள் விரல் விடத்தக்க எண்ணிக்கையில்தான் உள்ளன.

### 12. அருள்மிகு கம்பகரேஸ்வரர் ஆலயம், திருபுவனம், திருவிடைமருதூர் வட்டம்

கும்பகோணத்திலிருந்து 5 மைல் கிழக்கிலும், திருவிடைமருதூர் புகை வண்டிநிலையத்திலிருந்து ஒரு மைல் மேற்கிலும் அமைந்துள்ளது திருபுவனம் என்னும் சிற்றூர். இறைவன் திருநாமம் கம்பகரேஸ் வரர். தமிழில் நடுக்கந்தீர்த்த பெருமான். கம்பம் என்பது நடுக்கம், அபாயம் எனப் பொருள்படும். அன்னையின் திருநாமம் தர்மசம்வர்த்தினி. தமிழில் அறம் வளர்த்த நாயகி என்பதாகும்.

### 13. அருள்மிகு தேனுபுரீஸ்வரர் ஆலயம், பட்டீஸ்வரம், கும்பகோணம் வட்டம்

வான் பொய்ப்பினும் தான் பொய்யா வண்டமிழ்க் காவிரியின் தென்பால் திருவுறத் திகழ்கிறது இவ் வாலயம். கும்பகோணத்திலிருந்து சுமார் 4 மைல் தொலைவில் உள்ளது. நால்வரில் சிறந்த ஞானசம்பந் தரால் பாடல்பெற்ற புனிதத் தலமாகும். இறைவன் பெயர் பட்டீஸ்வரநாதர். அன்னையின் பெயர் பல்வளைநாயகி. பசுக்களைக் காத்து நின்றதால் தேனு புரீஸ்வரர் எனும் திருநாமம் உண்டு. தேவியவள் தவம் இயற்றிய பெற்றியுடைத்தாதலால் தேவி வனம், சக்திவனம் எனப் பெயர்களும் இத்தலத்திற்கு உள்ளன. துர்க்காதேவி பண்டைய சரித்திரப் புகழ் வாய்ந்த சோழப் பேரரசர்களின் காவல் தெய்வமாக விளங்கியுள்ளாள்.

### 14. அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், திருநாகேஸ்வரம், கும்பகோணம் வட்டம்

திருநாகேஸ்வரம் என்னும் இத்தலம் கும்பகோ ணத்திலிருந்து மூன்று மைல் தூரத்தில் கீழ்த்திசையில் அமைந்துள்ளது. ஆண்டவன் திருநாமம் நாகநாதன். அன்னையின் நாமம் பிறையணிவாணுதலாள். ஞான சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவராலும் பாடல் பெற்ற தலம். நகாராஜன் சிவ பெருமானை வழி பட்ட தலம் இது. ஆகவே நாகநாதஸ்வாமி என்னும் பெயர் விளங்குகிறது.

### 15. அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரஸ்வாமி திருக்கோயில், ஆலங்குடி, வலங்கைமான் வட்டம்

கும்பகோணத்திலிருந்து தெற்கே 11 மைல் தூரத் தில் உள்ளது. ஞானசம்பந்த சுவாமிகளால் பாடப் பெற்ற க்ஷேத்திரமாகும் இது. திருஇரும்பூளைவனம் என்னும் திருப்பெயரும் உண்டு. புஞ்ச ஆரண்யத் தலங்களில் நான்காவது தலம்.

### 16. அருள்மிகு சோமநாத சுவாமி ஆலயம் (பழையாறை) கும்பகோணம் வட்டம்

"தேனிற் மேவிய செழுமணி வீதிகள் சிறந்து
பாரில் நீடி பெருமைசேர் பதி பழையாறை"

எனத் தேனினும் இனிய தமிழ்க் கவிதை தந்து சென்றார் தெய்வப் புலவர் சேக்கிழார். இறைவனின் திருநாமம் சோமநாதர். அன்னையின் திருநாமம் சோமகலாநாயகி. ஆலயத்தின் சிற்பச் சிறப்புகள் மனதைக் கவர்வன.

### 17. அருள்மிகு இராமலிங்க சுவாமி ஆலயம், 108 சிவாலயம், பாபநாசம்

கும்பகோணத்திலிருந்து 9 மைல் மேற்கே தஞ்சைப் பெருஞ்சாலையில் அமைந்துள்ள தலம். குடமுருட்டி நதியின் தென் கரையில் உள்ளது. ஸ்ரீ ராம பிரான், கரன் தூஷணன் முதலான அரக்கர்களை வதம் செய்த பின்னர், பாபம் நீங்க வேண்டி இவ் வூரில் 108 சிவலிங்கங்களை ஸ்தாபித்து பூஜை செய்து பாபந் தொலைத்த காரணத்தால் பாபநாசம் என்று பெயர் ஏற்பட்டது. கீழை ராமேஸ்வரம் என்னும் பெயரும் இந்த ஊருக்கு உண்டு.

### 18. அருள்மிகு சீனிவாசப் பெருமாள் ஆலயம், நாச்சியார்கோயில், குடந்தை வட்டம்

கும்பகோணத்திலிருந்து சுமார் 6 மைல் தொலை வில் உள்ளது. அழகிய தலம். 108 திவ்விய தேசங்களில் இதுவும் ஒன்றாகும். சோழவேந்தர் கோச்செங்கணார் இத்திருக்கோயிலை எழுப்பியதாக வரலாறு. திருமங்கை யாழ்வார் 100 பாசுரங்கள் அருளி மங்களாசாசனம் செய்துள்ள மகத்தான தலம்.

### 19. அருள்மிகு சாரநாதப் பெருமாள் ஆலயம், திருச்சேறை, கும்பகோணம் வட்டம்

கும்பகோணத்திலிருந்து தென் கிழக்கே திருவாரூர் சாலையின் 9வது மைலில் அமைந்துள்ள திவ்ய தல மாகும் இது. பெருமாள் பெயர் ஸ்ரீ சாரநாதன். தாயார்

# பங்குனி உத்திரம்

- முனைவர் த. அமிர்தலிங்கம்



உத்திரத் திருநாளில் உம்திருவடி காண
எத்தனை தடைவரினும் வந்திடுவோம்
சித்திரைத் திருத்திங்கள் தோன்றிடும் முழுநிலவாம்
உம்எழில் முகம்கண்டு மகிழ்ந்திடுவோம். (உத்திரத்)

சண்முக நதியோடு சரவணக் குளம் ஆடி
சந்நிதிப் படியேறி நடந்திடுவோம்
பன்னிரு கரம்கொண்ட மன்னவன் உனைப்போற்றும்
பண்களும் பலபாடிப் புகழ்ந்திடுவோம். (உத்திரத்)

பாலுடன் தயிரூற்றிப் பன்னீரும் பஞ்சாமிர்தம்
அபிசேக ஆராதனை செய்திடுவோம்
பாலன்நீ வேடன் வேந்தன் ஆண்டியெனக்
கோலம் பலகொள்ளக் குளிர்ந்திடுவோம் (உத்திரத்)

மேக முகில்முட்ட நீளும் பழநிமலை
தேகம் உள்ளமட்டும் கண்டிடுவோம்
பாகம் உமைகொண்ட பரமன் சிவன்பெற்ற
முருகா எமைஎன்றும் காத்திடுவாய் (உத்திரத்)

---

*(முன்பக்கத் தொடர்ச்சி)*

திருப்பெயர் ஸ்ரீ சாரநாயகி. மூலவர் ஸ்ரீ சாரநாதப் பெருமாள் நின்ற திருக்கோலத்துடன் எழுந்தருளியுள்ளார். ஸ்ரீதேவி, பூதேவி, நீலாதேவி, மகாலட்சுமி, சாரநாயகி ஆகிய பஞ்சலட்சுமி சமேதராய் உற்சவ மூர்த்தியாய் காணப்படுகிறார். சாரபுஷ்கரணியைத் தீர்த்தமாகவும், அரச மரத்தை தல விருட்சமாகவும் கொண்டுள்ளார். திருமங்கையாழ்வாரால் பாடல் பெற்ற தலம் இது.

**19. அருள்மிகு மகாலிங்க சுவாமி ஆலயம், திருவிடைமருதூர்**

கும்பகோணத்திலிருந்து 6 மைல் தொலைவில் சிதம்பரம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது இத் திருவாலயம். சுந்தரரால் பாடல் பெற்றது.

மேற்கண்ட ஆலயங்களில் எல்லாம் மகாமகப் பெருவிழாவின் போது லட்சோபலட்சக் கணக்கான மக்கள் தரிசனம் செய்ய வருகிறார்கள். 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் மகாமகப் பெருவிழாவின்போது கும்பகோணம் நகர ஆலயங்களில் பல்வேறு திங்களில் நடைபெறும் ஆண்டு திருவிழாக்கள் அனைத்தும் ஒரே நிலையில் இம் மகாமகப் பெருவிழாவின்போதே கொண்டாடப்படுகின்றன என்பது சிறப்பு வாய்ந்த ஒன்றாகும்.

★★★

# படிக்கின்றிலை பழநித்திருநாமம்

- டாக்டர் த. அமிர்தலிங்கம்



அருணகிரிநாதர் மிக அதிகமான திருப்புகழ்களால் போற்றியுள்ள திருத்தலம் பழநிதான். 96 திருப்புகழ்களால் பழநித் திருத்தலத்தையும், அதற்கு அடுத்த எண்ணிக்கையில் - 83 திருப்புகழ்களால் திருச்செந்தூரையும், அதற்கு அடுத்த எண்ணிக்கையில் 78 திருப்புகழ்களால் திருவண்ணாமலையையும் அருணகிரிநாதர் போற்றியுள்ளார்.

பிறக்க முத்தித்தரும் திருத்தலம் திருவாரூர். நினைக்க முத்தித்தரும் திருத்தலம் திருவண்ணாமலை. தரிசிக்க முத்தித்தரும் திருத்தலம் காசி. இத் திருத்தலங்கள் நான்கினையும் முத்தித் திருத்தலங்கள் என்று குறிப்பிடுவர். ''காசியில் மீறிய பழனாபுரி'' ''பதிநால் உலகோர் ஏத்தும் பழனாபுரி'' ''அதிசயம் அநேகமற்ற பழநி'' என்று அருணகிரி நாதர் தம் திருப்புகழ்ப் பாக்களில் போற்றியிருப்பதால் முத்தித் தலங்கள் நான்கினை விடவும் முதன்மை பெற்ற திருத்தலம் பழநியே என்பது புலனாகும்.

பழநித் திருத்தலம் மூர்த்தி, தீர்த்தம், தலம் எனும் மூன்றாலும் முதன்மை மிக்க தலம் ஆகும்.

*''அண்ணலம் பதிகள் தம்முள்*
*ஆவிநன் குடியே ஆகும்*
*தண்ணரும் நதிகள் தம்முள்*
*சண்முக நதியே போற்றும்*
*எண்ணரும் தேவர் தமமுள்*
*முருகனே ஏற்றம் என்னா*
*நண்ணியிப் பதியில் ஆடி*
*நவின்றருச் சிப்பர் முத்தர்.''*

இப்பாடலால் பதிகளில் சிறந்தது திருஆவீனன் குடியாகிய பழநி என்பதும், நதிகளில் சிறந்தது சண்முக நதியாவதும், தெய்வங்களில் சிறந்தவர் முருகர் என்பதும் தெளிந்து கொள்கிறோம். முத்தர்களும் முந்திவந்து முழுமுதற் கடவுளாம் முருகனைப் பழநியம்பதியில் தரிசித்து வணங்குகின்றனர்.

திருஆவீனன் குடி எனும் பெயரும் தெய்வங்களும் வணங்கும் முதல் தெய்வமாக முருகர் திகழும் பெருமையை உணர்த்துகிறது. திருமகளும் (திரு), காமதேனுவும் (ஆ), சூரியனும் (இனன்), பூமியும் (கு) அக்கினியும் (டி), பழநிக்கு வந்து பழநி முருகனை வழிபட்டே தமக்குரிய ஆற்றலைப் பெறுகின்றனர் என்பதனால் பழநித் திருத்தலத்திற்கு திரு ஆவீனன் குடி என்பதும் ஒரு பெயராக அமைந்து விளங்குகின்றது. ''மெய்கண்ட தெய்வம் இத்தெய்வம் அல்லால் வேறில்லை'' என்பது மெய்யான வார்த்தையே ஆகும்.

உலகெங்குமுள்ள புண்ணியத் தலங்கள் எல்லாவற்றையும் வாழ்நாள் முழுதும் தரிசித்து வணங்கினால் பெறக் கூடிய திருவருளைப் பழநித் திருத்தலத்தில் ஒரே ஒரு நாள் முருகனைப் பூசிப்பதன் மூலம் பெற்றுவிட முடியும்.

*''கந்தனின் பூசை ஓர்நாள்*
*கடிநகர் இதனில் ஆற்றில்*
*இந்தமா ஞாலம் ஆதி*
*புவனங்கள் தொறும் எஞ்ஞான்றும்*
*வந்தனைப் புரியில் உண்டாம்*
*பலனெய்தும் மனமொன் றிங்கன்*

சிந்தனை புரியில் ஒரேழ்
கோடியும் சித்தி யாமால்''

என்ற பழநி தலபுராணப் பாடலைக் காண்க.

முருகப் பெருமான் எழுந்தருளியிருக்கும் ஆறு படை வீடுகளில் மூன்றாம் படை வீடாகத் திகழ்வது பழநி. எனினும் தமிழகத் திருத்தலங்களில் முதன்மை பெற்ற திருத்தலமாகப் பழநியே திகழ்ந்து வருகிறது.

முருகனின் முதற்படைவீடான திருப்பரங்குன்றம் முருகர் தெய்வானையை மணங்கொண்ட திருத்தலம். இரண்டாம் படைவீடான திருச்செந்தூர் வியாழ பகவான் வணங்க முருகர் கோயில் கொண்ட திருத்தலம். நான்காம் படை வீடான சுவாமிமலை பரமனுக்கே முருகர் பிரணவப் பொருளை எடுத்துரைத்த திருத்தலம். ஐந்தாம் படைவீடான பழமுதிர்ச்சோலை ஒளவைக்கு முருகர் ''சுட்டப் பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?'' என்று அறிவுறுத்திய திருத்தலம். இத்திருத்தலங்களை போற்றுவனவாக அமைந்துள்ள ஐந்து பாடல்களையும் இங்குப் படித்து மகிழலாம்.

''பெய்து நீர் வார்த்தும் உன்சீர்
போற்றிடும் விண்ணோர் வேந்தன்
தெய்வநல் யானை என்னும்
தாழ் குழல் பொன்கை சேர்ப்பச்
செய்தவத் தூயோர் பெற்ற
கண்ணிணைப் பயனாய் காணச்
செய்தனை மணமும் போற்றும்
தென்பரங்குன்றம் போற்றி''

''வெற்றியும் திருவும் மேன்மேல்
பெற்றிட விழைந்தே வேலோய்
சுற்றமாம் படைகள் சூழச்
சமர்அடச் செல்லும் பாதை
கற்றவர் வியாழர் வந்து
வணங்கிடக் கோயில் கொண்ட
நற்றலம் செந்தில் நாளும்
பாடுவோம் நாவால் போற்றி''

''தருக்கினால் தலைவ ணங்கா
பிரமனைச் சிறையில் சேர்த்து
விருப்பினால் படைக்கும் வேலை
வடிவுறச் செய்தாய் ஞானப்
பரமனும் ஒதுங்கி நின்று
பிரணவப் பொருளைக் கேட்ப
உரைத்தனை சுவாமி நாதா
ஏரகம் தொழுவோம் போற்றி''

''வானவர் வணங்கி வேண்ட
அவுணரை வென்ற வீர!
கானவர் மகளின் மீதில்
கொண்டதாம் அன்பில் வேண்டி
ஆனைநல் முகத்தின் அண்ணல்
வந்தருள் புரிந்து வாழ்த்த
ஆனதுன் மன்றல் போற்றும்
திருத்தணிக் குன்றம் போற்றி''

''கனிமொழி ஒளவை பாட்டி
கருத்திலும் விந்தை ஊட்டிக்
கனிகளில் குளிரும் காயும்
கனியிரு வகையாம் என்றாய்
கனிவுடன் சங்கம் ஏறிக்
கனிதமிழ் காத்தோய் வாழும்
கனிமுதிர்ச் சோலைக் கோயில்
கண்களால் காண்போம் போற்றி''

இவ்வாறு திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், சுவாமி மலை, திருத்தணி, பழமுதிர்ச்சோலை ஆகிய திருத்தலங்கள் முருகர் தமக்காகவும், தம்மை வேண்டிய - வணங்கிய குறிப்பிட்ட சிலர்க்காகவும் கோயில் கொண்ட திருத்தலங்களாகத் திகழ, பழநித் திருத்தலம்தான் பக்தர்கள் எல்லோருக்குமாக எழுந்தருளிய ஒப்பற்ற திருத்தலமாகத் திகழ்கிறது.

முருகர் பழம் காரணமாக எழுந்தருளிய திருத்தலம் பழம் நீ - பழநி என்றாயிற்று எனக் கூறப்படும் வரலாறு உண்டு. எனினும் முருகனே ஞானப்பழம் ஆனவன். அவன் தனக்குப் பழம் கிட்டவில்லை என்று கோபம் கொண்டு பூவுலகிற்கு எழுந்தருளினான் என்பது தவறு. பழத்தைக் காரணமாகக் கொண்டு உலகமக்கள் அனைவருக்கும் உய்வு நல்கவே பழநியில் எழுந்தருளினான் என்பதே நாம் தெரிந்துணர வேண்டிய உயர்கருத்தாகும்.

''பிரணவப் பொருளைக் கூறும்
சரவண அறிவாய் ஈன்ற
இருவரும் அன்றோ ஞாலம்
ஆயினும் அன்பால் முன்னோன்
அருந்தவே கனியைத் தந்து
சிறந்திடும் விழைவால் நீயே
விரும்பிமு வலகும் சுற்றி
வந்தனை உயிரே போற்றி''

''அன்பினால் ஆண்டி யாகிச்
சினமென நடிப்பைக் காட்டி
மன்பதை வாழும் மாந்தர்
கண்டுமே நாளும் போற்றப்
பொன்மனம் கொண்ட வேலோய்
இன்புற வந்திங் கேறும்

தென்திருப் பழநிக் குன்றம்
தெண்டனும் செய்வோம் போற்றி''

எனவரும் பாடல்களால் உலகமக்களுக்குத் தரிசனம் தந்து வரங்களை வழங்கவே முருகன் பழநிக்கு எழுந்தருளியமை தெளிவாகிறது.

இதே கருத்தை சங்கரதாஸ் சுவாமிகள் அருளியுள்ள தண்டபாணிப் பதிகமும் வற்புறுத்துகிறது. உலக மக்களின் வினைகளைத் தீர்த்துக் காக்கவே முருகர் பழநிக்கு எழுந்தருளினார். மற்றபடி மாந்தர்தம் மனக்குறையை நீக்கிட வல்ல முருகருக்கு ஏதும் மனக்குறை இருக்கவில்லை என்பதாகக் கூறும் நயமிகும் அப்பாடல்ரசத்தை நாமும் இங்கே பருகி இன்புறுவோமாக.

''ஞானப் பழத்தைப் பிழிந்துரச மன்பினொடு
நாமுண்ணவுங் கொடுத்த
நல்லகுரு நாதனுக்கு என்னவிதம் இக்கனியை
நாமீவது என்று நாணித்
தான் அப் பனித் தலையர் தரவில்லை ஆதலால்
சாருமொரு பிழையில்லையே
சத்திவடி வேலொடுந் தத்து மயிலேறிடும்
சண்முகா குறையும் உளதோ?
ஏனிப்படி கோவணத் தொடுந் தண்டுகொண்டு
இங்குற்றோர் ஆண்டி யானாய்
எமதுவினை பொடிபடவும் அல்லவோ வந்துநீ
இப்படி இருக்கலாம்ஆ
சான்அப்பன் என்னையன் என்னவும் எண்ணினேன்
தருவையருள் பழநி மலையில்
சந்ததம் குடிகொண்ட சங்கரன் கும்பிடும்
தண்டபாணித் தெய்வமே''

எனும் இப்பாடலில் முருகர் பழநிக்கு எழுந்தருளிய காரணம் ''எமது வினை பொடிபடவும் அல்லவோ வந்து நீ இப்படி இருக்கலாம்'' எனத் தெளிவுபடுத்தப் பட்டிருப்பது காணலாம்.


பழநியில் ஆண்டிக்கோலம் பூண்டிருக்கும் முருகரின் கருணையேகருணை. முருகர் தமக்கொன்றும் வேண்டாதவர், தம்மிடம் உள்ள எல்லாமும் பக்தர்களுக்கே உரிமையாக்கும் வான் கருணை பூண்டவர்; அதை உணர்த்துவதே பழநி முருகரின் ஆண்டிக் கோலம். பக்தர்கள் எந்நேரமும் எவ்வித தடைகளும் இன்றி வந்து அவரை வணங்கிடும் பொருட்டே ஆண்டியாகத் திகழ்கிறார். அவருடைய ஆண்டிக் கோலத்தின் அருமை நலத்தை அறியாமல் சில மெய்யன்பர்கள் பழநிக்குச் சென்றால் ஆண்டிக் கோலத்தைத் தரிசித்துத் திரும்பக் கூடாது. அவ்வாறு திரும்பினால் கஷ்டங்களே உண்டாகும். முருகரின் இராஜ அலங்காரம் பார்த்த பிறகே வீடு திரும்ப வேண்டும் என்று கூறுவது உண்டு. அவர்கள் முருகரின் ஆண்டிக் கோலப் பெருமையை அறியாதவர்கள் என்பதைக் கீழ்வரும் பாடல் தெரிவிக்கிறது.

''ஆண்டி ஆண்டி என்றன்னை
அழையா நிற்பர் மெய்யர் சிலர்
ஆண்டிக் கோலத் தருமைநலம்
அன்னார் முழுதும் அறிவாரோ?
தோண்டித் தோண்டும் நீர்க்கேணி
சுரக்கும் நீர்போல் நின் கருணை
வேண்டித் தொழுவேன் பழநிமலை
வேலா என்னைக் காத்தருளே''

முருகப் பெருமானின் வான்கருணை, என்றும் வற்றாமல் பொழியக் கூடியது என்பதை இப்பாடல் நமக்குத் தெரிவிக்கிறது. ஆகவே பழநிக்குச் சென்று வழிபடும் பக்தர்கள் ஆண்டிக் கோலத் தரிசனம் துன்பம் தருமோ என்று அஞ்ச வேண்டுவதில்லை. முருகரைப் பழநியில் எக்கோலத்தில் தரிசித்தாலும் தரிசித்தவர்கள் எக்காலமும் வையத்தில் சகல சௌபாக்கியங்களும் அனுபவித்துப் பிறவிப் பிணி நீங்கி அவருடைய திருவடிப் பேற்றையும் பெறுவர் என்பதற்கு யாதொன்றும் ஐயமில்லை.

முருகப் பெருமானின் தாயார் மலைகளுக்கு அரசனான பர்வதராசன் புத்திரியாகிய பார்வதி; முருகப் பெருமானின் தந்தை பொருள்களுக்கெல்லாம் அதிபதியான குபேரனைத் தோழனாகக் கொண்ட சிவபெருமான். முருகரின் தாய்மாமன் கடல்வண்ணனும், கடல்மேல் பள்ளி கொண்டிருப்பவனுமாகிய பரந்தாமன். மாமி அட்டஐஸ்வரியங்களுக்கும் தெய்வமான திருமகள். மூவுலகையும் ஆளக்கூடிய தேவேந்திரன் முருகருக்குத் தெய்வ யானையை மணம் செய்தளித்த மாமன். இவ்வளவு சிறப்பிற்கும் செல்வத்திற்கும் அதிபதியான முருகப் பெருமான் ஆண்டிக் கோலம் பூண்டு பழநியில் கோயில் கொண்டு விளங்குவது உலக மாந்தரை உய்வித்தருளும் பொருட்டே என்பதைக் கீழ்வரும் தண்டபாணி பதிகப் பாடலாலும் நாம் அறிந்து மகிழலாம்.

''பொன்மயக் கிரிபெற்ற புதல்வியோ அன்னையாம்
பொருளுக்கோர் அதிபதி எனும்
புட்பக விமானத்தனைத் தோழனாய்க் கொண்ட
புங்கவனும்உன் தந்தையாம்
கன்மலை குடைகொண்டு மழைத்தடுத்தன்று நிரை
காத்தவொரு கடல்வண்ணனோ
கருதுதாய் மாமனாம் பெரிய தனமேந்திடும்
கமல மாதுஉன் மாமியாம்



பன்மலர் தொடைபூண்டு முவுலக காள்பவன்
பார்க்கிலொரு பெண் தந்தவன்
பாரிலிப் பெருஞ் செல்வம் உற்றும் நீ கோவணப்
பண்டாரமாய் வருவதேன்?
சென்ம வெப்புப்பிணி அகற்றுமுயர் சஞ்சீவி
தழையவரு பழநி மலையில்
சகல உலகினரும் அடிபரவ ஒரு பொருளுதவ
தண்டபாணி தெய்வமே!''

பிறவிப் பிணியோடு உடலுக்கு வரக்கூடிய பிணிகளையும் அகற்றவல்லது பழநி மலையே ஆகும். பழநிமலையில் வீசிக்கொண்டிருக்கும் சஞ்சீவிக் காற்றின் மகிமையால் தீராத பிணிகள் யாவும் தீர்ந்துவிடும். பழநி மலை மேல் கோயில் கொண்டிருக்கும் தண்டாயுதபாணி மகிமையால் தீராத வினைகள் யாவும் தீர்ந்துவிடும்.

இத்தகைய பழநி முருகனின் நாமத்தை நாளும் படித்து உருக வேண்டும்; தாம் படித்து உருகாவிடினும் படித்து உருகுகின்ற உயர் பக்தர்களின் திருவடிகளைப் பணிந்து தலைமேல் சூடிக்கொள்ள வேண்டும். "பழநி முருகா" "பழநி முருகா" என்றே அவன் நாமத்தை நாளும் ஜெபிக்க வேண்டும். பழநி முருகரின் பக்தர்களுக்கு அமுது அளித்து அவ்வாறு அளிப்பதனால் வறுமை வருமாயின் அவ்வறுமையினை வேண்டி இரந்து பெற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு பொருட் செல்வத்தினும் மேம்பட்ட பழநி முருகனின் அருட்செல்வமே வேண்டுமென விம்மி விம்மிப் பரமானந்தம் மேற்கொள துடிக்காத - பதைக்காத நெஞ்சங்களுக்கு உய்வே இல்லை என்பதைத்தான் அருணகிரி நாதர் தம் கந்தர் அலங்கார நூலில்

''படிக்கின்றிலைப் பழநித் திருநாமம் படிப்பவர் தாள்
முடிக்கின்றிலை முருகா என்கிலை முசியாமல் இட்டு
மிடிக்கின்றிலை பரமானந்தம் மேற்கொள விம்மி விம்மி
நடிக்கின்றிலை நெஞ்சமே தஞ்சமேது நமக்கினியே''

என்று பாடியிருக்கிறார்.

பழநி முருகனைப் போற்றிடுவோம்.
பழவினைகளை மாற்றிடுவோம்.

# கண்கொள்ளாக் கயிலாயம்

- ''கயிலைப் புனிதர்'' மனோகர்

சைவர்களுக்குத் திருக்கோயில் என்பது தில்லையைச் (சிதம்பரம்) குறிக்கும். திருமலை என்பது மலைகளில் சிறந்ததான கயிலாய மலையைக் குறிக்கும்.

கயிலையை நோக்கிச் சென்றவர் அந்நாளில் திரும்பி வருவதே கடினம். எனவே கயிலாயம் செல்வது பரகதியடைவதோடு ஒப்பிடப்பட்டது. கயிலைச் சென்று மரணம் அடைபவர் கயிலாய பதவி பெற்றுவிட்டதாகவே கருதப்படுவர். அங்கு செல்பவர் சிவனோடு ஐக்கியமாவர்.

சிவபெருமான், பார்வதி தேவியோடும், முப்பத்து முக்கோடி தேவர்களோடும் நிலையாகத் தங்கியிருக்கும் இடமாக இந்தியப் புராணங்களும், இதிகாசங்களும் பேசும் கயிலாயம் எங்கிருக்கிறது? அதற்கு இப்போது ஒரு திருப்பயணியாகப் போவது சாத்தியந்தானா? என்ற கேள்விகள் எழுவது இயற்கை.

இமயமலையின் வட சாரலில் மேற்கு திபெத்தின் எல்லையில் கயிலாய மலை அமைந்திருக்கிறது. திபெத் பகுதி 1950இல் சீனாவினால் ஆக்ரமிக்கப்பட்டது. எனவே இன்றைய சீனப் பெருநாட்டின் எல்லைக்குள்தான் கயிலை விளங்குகிறது.

கயிலையைப் பற்றி ரிக் வேதத்திலேயே குறிப்புகள் உள்ளன. அர்ச்சுனன் கயிலாய மலைப் பகுதியில் தவமிருந்தான். வியாசரும், பீமனும் கயிலையை வலம் வந்திருக்கின்றனர். அசோகப் பேரரசர் மேற்கு திபெத்தைக் கைப்பற்றித் திரும்பும் வழியில் கயிலாய மலையையும், மானசரோவர் தடாகத்தையும் வழிபட்டு வந்தார்.

தமிழகத்துச் சைவ நாயன்மார்கள் பலருக்கும் கயிலையோடு தொடர்புண்டு. திருநாவுக்கரசர் கயிலைப் பனிமலை சென்று அங்கு உறையும் சிவபெருமானைக் கண்ணாரக் கண்டே தீருவதென தம் தள்ளாத வயதில் வடக்கு நோக்கிச் சென்றார். காசி வந்தார். அதன்பின் இமயமலைக் காடுகளில் நடந்து சென்றார். தொடர்ந்து நடந்து செல்ல அவர் கால்களில் வலுவில்லை. மார்பினால் உந்திச்சென்று, மார்பு எலும்பு முறிந்தும் உள்ளம் சோராது பயணம் தொடர்ந்தார்.

அப்பரின் அயரா பக்திப் பெருக்கைக் கண்ட கயிலைநாதன், அவரைத் தடுத்தாட்கொண்டு கயிலைப் பகுதியில் உள்ள பொய்கையில் மூழ்கச் செய்து, திருவையாற்றில் எழ வைத்து, அங்கேயே திருக்கயிலாய காட்சியைக் கண்குளிரக் காட்டி அருளினார். 30 திருத்தாண்டகங்களில் நாவுக்கரசர், மெய்மறந்து கயிலையைப் பாடிக் கசிந்துருகுகிறார்.

திருஞான சம்பந்தர் திருக்காளத்தியில் இறைவனை வணங்கியபோது அங்கேயே அவர் கயிலைக் காட்சி கண்டார்.

சுந்தரர் சிவபெருமான் அனுப்பிய ஐராவதம் என்ற வெள்ளை யானையின் மீது ஏறிக் கயிலை சென்றார். அவர் தோழர் சேரமான் பெருமாள் நாயனார் குதிரை மேல் பாய்ந்தேறி அதன் காதில் சிவமந்திரத்தைச் சொல்லி, ஆகாயத்தில் பாய்ந்து சுந்தருக்கு முன்பு கயிலாயம் சென்றார்.

ஔவையார், விநாயகரை வேண்ட, விநாயகர் துதிக்கையால் தூக்கிவிட கயிலாயபுரி சேர்ந்தார்.

ஆதிசங்கரர் ஒவ்வொரு திருத்தலங்களையும் தரிசித்துக் கொண்டே கயிலாயத்திற்கும் சென்றார். ஐந்து ஸ்படிக லிங்கத்தையும், ஒரு சுவடிக்கட்டையும் சிவபெருமானிடம் பெற்றார்.

காரைக்காலம்மையார் இப்புனித மலைமேல், காலால் நடக்கக்கூடாதென தலையினால் நடந்து சென்றார். சிவபெருமான் அவரை அம்மையே என்று அழைத்து வேண்டியதை வேண்டச் சொன்னபோது ''பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண்டும்'' என்று பாடியதும் இங்குதான்.

இந்துக்களுக்கு மட்டுமின்றி பௌத்தர்களுக்கும், சமணர்களுக்கும் கயிலாயம் புனிதத் தலமாகும். ஐநூறு போதி சத்துவர்களுடன் புத்தர் இங்கு தங்கி இருந்தாராம். இதனால் திபெத்திய பௌத்தர்கள் கயிலைமலை மீதும், மானசரோவர் தடாகத்தின் மீதும் பயபக்தி கொண்டுள்ளனர்.

சமண மதத்தைத் தோற்றுவித்த ரிஷிபானந்தா. கயிலை மலையின் சிகரத்தில் தான் தமக்கு ஞானம் பிறந்தது என்றதால் சமணர்களும் கயிலையை தரிசிக்க விரும்புகின்றனர்.

கடவுள் பக்தி இல்லாதோரும் இந்த மலையின் இயற்கைப் பேரழகிலும், அருகில் உள்ள மானசரோ




வர் ஏரியின் ஏகாந்த இனிமையிலும் பூலோக சொர்க்க மாக இவ்விடத்தை உணர்வர்.

சென்றவர் திரும்பி வர முடியாமல் இறைவனோடு கலந்து மட்டுமே போக முடிந்த கயிலாயப் பயணம் அண்மையில் மிக எளிதாக மாறத் தொடங்கியுள்ளது. செப்பனிட்ட பாதையில், நவீன உந்து வண்டிகளில் பெண்களும் பயமின்றிச் சென்று திரும்பும் வசதி ஏற்பட்டுவிட்டது.

1962 இல் இந்திய சீன எல்லைப்போரால் புனிதப் பயணம் நின்றது. 1982 இல் இந்திய சீன நல்லுறவு ஒப்பந்தப்படி யாத்திரிகர்கள் கயிலாயம் செல்ல மீண்டும் வழி பிறந்தது. 1982 முதல் கயிலாயப் புனிதப் பயணம் செல்ல வேண்டும் என்ற உத்வேகம் உண்டாயிற்று. புதிய விழிப்பின் பயனாக ஆண்டுக்கு 350 பேர்கள் மட்டுமே சென்று வந்த கயிலைப் பயணத்திற்கு இன்று ஆயிரக்கணக்கானோர் செல்லத் தொடங்கியுள்ளனர். 1996 ஆம் ஆண்டு முதல் நேபாளத்தின் தலைநகர் காட்மண்டுவிலிருந்து திபெத்திற்குள் நுழைந்து கயிலாயத்தை அடைகின்றனர்.

சைவர்களின் புனிதத் தலங்களில் முதன்மையான கயிலாய மலையும், மானசரோவர் தடாகமும் கௌரி சங்கர் எனப்படும். கயிலாயம் சிவ வடிவம். மானசரோவர் சக்தி வடிவம். இவற்றைக் கண்டு தொழுதுவிட்டால், பாரதத்தில் உள்ள கணக்கற்ற தலங்களைத் தொழுது வணங்கியதன் பயன் கிடைக்கும் என்று நம்பப்படுகிறது.

கயிலாயம் கடல் மட்டத்திலிருந்து 22,028 அடி உயரத்தில் மற்ற மலைகள் சூழ கம்பீரமாக உயர்ந்து நிற்கிறது. 50 கி.மீ. சுற்றளவு கொண்ட கயிலாயத்தைச் சுற்றியுள்ள மலைகளில் பனி படர்ந்துள்ளது. வெயிலுக்கு அவை உருகும். கயிலை மட்டும் எப்பொழுதும் முழுக்க முழுக்க பனிமலையாய்க் காட்சி அளிக்கிறது.

சிவபெருமான் வீற்றிருக்கும் இம்மலைப் பகுதியில் மனிதனால் கட்டப்பட்ட கோயில் ஒன்றுகூட இல்லை. ஆனால் கோயில்களுக்கு எல்லாம் மாதிரியாக அங்கு இயற்கையாகவே மலைகள் அமைந்திருக்கிறது. தென்முகமாக அது இந்தியாவைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. நான்கு பக்கமும் சமகோணமாய் பிரமிடைப் போன்றும் கூம்பு வடிவமாகவும் அமைந்துள்ள இயற்கையின் அதிசயம் கயிலை.

கயிலையைச் சுற்றியுள்ள நூற்றுக்கணக்கான சிறு மலைகள் கோபுரங்கள் போல அமைந்துள்ளன. வடிவத்தாலும், அளவாலும், நிறத்தாலும் அவை மாறுபட்டவை. சதுரம், வட்டம், முட்டை வடிவம், முக்கோணம், தூண் போன்றவை என்று எண்ணற்ற வடிவங்கள்!

இந்தியாவின் தென்முனையிலிருந்து இமயம் வரை எத்தனை வகை கோபுரங்கள் உள்ளனவோ அத்தனைக்கும் மாதிரிகள் கயிலையில் உண்டு. இன்றும் புதிதாக ஏதாவது கட்ட வேண்டுமானாலும் அதற்கும் மாதிரி கயிலையில் கிடைக்கும்.

கோபுரங்களுக்கெல்லாம் மேலே விண்ணை எட்டிப்பிடித்து நிற்கும் கயிலாய சிகரத்திற்கு விசுவ லிங்கம் என்று பெயர்.

இயற்கை முழுவதும் இறைவன் மயம் எனும் உணர்வை கயிலையில் பெற்றே தீரவேண்டும். சிவ பெருமானது சன்னதி சார்வதால் விளையும் ஒப்பற்ற சாந்தி, தெவிட்டாத ஆனந்தம், உள்ளொளி, அருட் பெருக்கு, ஆகியவை இங்கே உள்ளங்கை நெல்லிக் கனிபோல் உள. உடலினின்று உதிர்கின்ற உரோமம்

ஒன்றைப் பொருட்படுத்தாதிருப்பது போல, உடலே கயிலையில் உகுந்துவிடினும் அது நமக்கும் ஒரு பொருளன்று. அத்தகைய மேலான மனநிலை அங்கு வந்து வாய்க்கிறது.

முப்பத்து முக்கோடி தேவர்களும் வசிப்பதற்கென்று கட்டப்பட்ட தேவலோகம் என்று அதை அழைத்தாலும் தகும். இயற்கையே நகரம் போன்று அமைந்த இடம் ஏதாவது ஒன்று இருக்கிறதென்றால் அது கயிலையைச் சுற்றியுள்ள மலைகள்தான்.

இரவில் மற்ற இடங்களெல்லாம் இருள் சூழ்ந்திருக்கும் போது கயிலை வெள்ளை வெளேரென மிளிர்கின்றது. அதிகாலையில் பால சூரியனுடைய இளங்கதிர் கயிலை மலையின் மீது தோயும்பொழுது அதன் திருக்காட்சியைக் காணக் கண் கோடி வேண்டும்.

உருக்கியெடுத்த தங்கம் போன்று கயிலை தகதக வென்று திகழ்கிறது. புகைவிடாத அக்னி ஜுவாலை போன்று பிரகாசிக்கிறது. அதைப்பார்த்தால் விளையும் பூரிப்பு உள்ளத்தைப் பிளக்கிறது. மாலையில் செந்தாமரைப் பூக்குவியல் போன்று அது தென்படுகிறது. பார்ப்பவர் உள்ளத்தைப் பறிமுதல் செய்து கொண்டு உலகுக்கோர் அற்புதமாக விசுவலிங்கம் வீற்றிருக்கிறது.

கயிலாயத்தின் உச்சியிலிருந்து நான்கு பெரு நதிகள் உற்பத்தியாகி மானசரோவர் ஏரியைச் சுற்றிப் பயணம் தொடர்கின்றன. கயிலையின் வடக்கிலிருந்து சிந்து நதியும், தெற்கிலிருந்து கங்கையின் உப நதியான கர்னாலியும், மேற்கே சட்லஜும், கிழக்கே பிரம்மபுத்திராவும் தோன்றுகின்றன.

கயிலை மலைக்குச் செல்லும் வழியில், கயிலையின் உச்சியிலிருந்து தென்கிழக்காக 40 கி.மீ தூரத்தில், உலகிலேயே உயரமான இடத்திலுள்ள (14,950 அடி) நன்னீர் தடாகம் தான் மானசரோவர்! 24 கி.மீ அகலத்துடனும், 88 கி.மீ சுற்றளவுடனும் ஒரு உள்நாட்டுக் கடல்போல அது பரந்து விரிந்து காணப்படுகிறது. 320 கி.மீ பரப்பளவுள்ள அதன் ஆழம் 255 அடியாகும். கயிலாய மலைக்கும், குர்லா மந்தாதா மலைக்கும் இடையில் மானசரோவர் இயற்கையின் கொடையாக பூமிக்குப் பெருமை சேர்க்கிறது.

வேத காலத்திற்கு முன்னரே முனிவர்கள் மானசரோவர் தடாகக் கரையில் தவமிருந்திருக்கின்றனர். இடையூறின்றித் தவம் செய்ய முனிவர்கள் நான்முகனை வேண்டியபோது அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி, தம் மனதிலிருந்து மானசரோவரைப் படைத்தார் படைப்புக் கடவுள் என்பது புராண வரலாறு. மானசரோவர் தடாகம், தேவர்களுக்காக பிரும்மா மானசீகமாக வழங்கிய தடாகம் என்பது இதன் பொருள்.

மானசரோவரின் புனித நீரை அருந்துவோர், பல நூறு பிறவியின் பாவங்கள் நீங்கி சுவர்க்கம் அடைவர் என்கிறது இராமாயணம். தடாகக் கரை மணல் பல வண்ணங்களில் காட்சியளிக்கிறது. சுற்றியுள்ள மலைகளில் மூலிகைகள் செழித்துள்ளன. அவை அரிய மருத்துவ குணம் கொண்டவை. மனம் ஈர்க்கும் மணம் கொண்டவை. ஏரிக்கரையில் காணப்படும் பல வண்ணக் கற்களை எடுத்து சிவரூபமாகக் கருதி பூசை செய்வர். பாணலிங்கம் என்று இக்கற்களை அழைப்பர்.

உயரே நீலவானம். தடாகத்தில் கண்ணாடி போன்று தெளிந்த நீர். இதைக் காண்பதே இன்பத்திலும் இன்பம். தடாகத்தில் நகநகபா என்ற சைவப் பறவைகள் புல் பூண்டுகளையே உண்டு வாழ்வது வியப்பளிக்கிறது. ஏரியில் பல வண்ணப் பறவைகள் பறந்து விளையாடுவதும், கூட்டம் கூட்டமாக நீரில் நீந்திச் செல்வதும் கண்கொள்ளாக் காட்சிகள். காற்றும், அலையும் இல்லாத நேரத்தில் கயிலை மலையின் அற்புதக் காட்சி பிம்பத்தை மானசரோவரின் பளிங்கு நீரில் முழுமையாகக் கண்டு மெய் மறக்கலாம்.

மானசரோவருக்கு 8 கி.மீ தொலைவில் உள்ளது தான் ராட்சஸ்தல ஏரி. இராவணன் இதன் கரையிலிருந்து தவமியற்றினான் என்பார்கள். இதில் உள்ள நீரை, பக்தர்கள் தொடுவதோ பருகுவதோ இல்லை. நச்சுத் தன்மை படைத்த இந்நீரைக் குடித்தால் வயிற்று வலியும், குளித்தால் உடல்வலியும் ஏற்படுகிறதாம். 220 கி.மீ பரப்புடைய இதன் ஆழம் 140 அடி. இவ்வேரியில் லசாடோ, டோப்செர்மா என்ற இரு தீவுகள் உள்ளன. குளிர்காலத்தில் ராட்சஸ்தல ஏரியும், மானஸரோவர் தடாகமும் பனிக்கட்டியாக உறையும். அப்போது பாரம் ஏற்றிய குதிரைகள், யாக் எருமை போன்றவை சர்வ சாதாரணமாக ஏரியின் பரப்பில் குறுக்கிலும் நெடுக்கிலும் செல்கின்றன.

எம்மதத்தினராயினும் ஆகுக, மானிடராகப் பிறந்தவர் யாவரும் வாழ்வில் ஒரு முறையேனும் இப்பயணம் மேற்கொண்டால், பிறவிப்பயனை அடையலாம்.

திருக் கயிலாயப் பயணம் செல்ல விரும்புவோர் இக்கயிலாயப் பயணத்தில் பல்லாண்டுகள் அனுபவம் உள்ள கயிலை டிராவல்சை அணுகலாம்.

*தொடர்பு முகவரி :*

*கயிலை டிராவல்ஸ்*

*11, வீராசாமி தெரு, முதல் தளம், பெரிமேடு,*

*சென்னை - 600 003. தொ.பே: 52053923*

★ ★ ★

# ''ஆமாறுன் திருவடிக்கே அகம் குழையேன்''

- பேராசிரியர் முனைவர் அரு. சுப்பிரமணியன்

மாணிக்கவாசகரும், வள்ளலாரும் தம் பாடல்களில் ஆமாறு, சாமாறு என்ற தொடரைப் பயன்படுத்தியுள்ளனர்.

''ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே''
- திருவாசகம்

''சாமா றணைந்தும் தவர்த்திங் கெனக்கே
ஆமாறு அருளிய அருட்பெருஞ்சோதி''
- திருவட்பா

சாமாறு, ஆமாறு என்ற தொடர் இடைக் குறைந்து சா(கு)மாறு, ஆ(கு)மாறு என வந்துள்ளன. போமாறு என்ற தொடரால் போ(கு)மாறு இடையில் கு என்ற எழுத்துக் குறைந்து, போமாறு என வந்துள்ளது. இதைப் போலவே ஆமாறும், சாமாறும் வந்துள்ளன. ஆயின் அதன் பொருள் மாறவில்லை. ஆறு என்பதற்கு நெறி அல்லது வழி என்பது பொருளாகும். எனவே ஆகுமாறு - ஆமாறு - ஆகின்ற ஆறு - ஆகின்ற நெறி. போகுமாறு - போமாறு - போகின்ற ஆறு - போகின்ற நெறி என்பதாகும்.

**சாமாறு நெறி:**

சாமாறு :- சாகின்ற நெறி என்பது இறந்து பிறக்கின்ற நெறி ஆகும். தோற்றம் உண்டேல் மரணம் உண்டு என்றார் சுந்தரர். மனித வாழ்க்கை, பிறப்பு, வாழ்வு, இறப்பு என்ற மூன்றில் அடங்குகின்றது. பிறந்து பிறந்து, வாழ்ந்து வாழ்ந்து, இறந்து இறந்து சுழன்றுக் கொண்டே தடுமாறி வருகின்றோம். பிறப்பு என்பது ஏழுவகைப்படும். நீர்வாழ்வன, தாவரம், ஊர்வன, பிறப்பன, விலங்கு, மக்கள், தேவர் என எழு வகைப் பிறப்பு

திருவள்ளுவர் எழுவகைப் பிறப்பு உண்டு என்றார்.

''ஒருமைக் கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து''

''எழுவகைப் பிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்கா
பண்புடைய மக்கட் பெறின்''
- திருக்குறள்

இதனையே மாணிக்கவாசகப் பெருமானும், புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக் கல்லாய், மனிதராய், பேயாய் கணங்களாய் வல்லசுராகி முனிவராய் தேவராய் செல்லா நின்ற இத்தாவரச் சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்'' என்று சிவபுராணத்தில் கூறியுள்ளார்.

இவ்வாறு மாணிக்கவாசகர் பிறந்த பிறப்புகளைக் கோடிட்டுக் காட்டுகின்றார். இதனால் பிறந்து, இறந்து, பிறப்புகள் சுழன்று கொண்டே வருகின்றது. அதனால் தான் பிறவியைப் பெருங்கடல் என்றனர் நம் முன்னோர்கள். பிறவிகளில் அரிதானப் பிறவி மானிடப் பிறவி என்றார் ஔவையார். மானிடப் பிறவியைப் பெற்றவன் பிறவிப்பெருங்கடலை நீந்தி மீண்டும் பிறவாமையைப் பெறுதல் வேண்டும். பிறவியை மீண்டும் பெறாமல், மானிடன் வீணே சாகின்றான். மானிடன் தன் கல்வியையும், ஞானத்தையும் பயன்படுத்தாது அழிகின்றான். இறக்கின்றான். பிறக்கின்றான். இது உலகின் பொது நெறியாகும். இதுவே சாமாறாகும். சாமாறு என்பது பிறந்து இறப்பது ஆகும்.

மனிதன் ஆசை, பொறாமை, வெகுளி, முதலியன வற்றை சுமந்துக் கொண்டு அன்பு, இரக்கம், அருள், கருணை முதலானவற்றை தம்மிடம் இருந்து நீக்கி விட்டு மனித உருவில் விலங்காக வாழ்ந்து, பாவச் சுமைகளை பிடித்துக் கொண்டு பலவித தீவினைகளைச் செய்து வீணாக இறந்து மீண்டும் பிறக்கின்றான்.

இது சாமாறு நெறியில் வாழ்வது ஆகும். மெய்ஞ் ஞானம் இவனிடம் இடம் பெறவில்லை என்பது தெளிவாகின்றது.

**ஆமாறு நெறி:**

ஆகின்ற நெறி என்பது பிறவாது இருக்கின்ற

நெறி ஆகும். மானிடன் கல்வியும், ஞானமும் பெற்று வாழ்தல் வேண்டும். கல்வி என்பது வாழ்க்கைக்கு உதவும். ஞானம் எனப்படுவது மெய் ஞானமாகும். ஆனால் மானிடன் மெய்ஞானத்தை அடைய முயலா மல் வீணாக அழிகின்றான். ஞானிகள் பிறந்து பின் இறவாத நெறியைக் கண்டு வாழ்ந்தனர். இதுவே பிறவாத, இறவாத நெறியாகும். பிறவியாகிய பெருங் கடலை ஞானிகள் நீந்தினர். உடலை மண்ணுக்கோ அல்லது தீய்க்கோ கொடுக்கவில்லை. பிறந்த இந்தப் பிறப்பிலே கிடைத்த உடம்பை நித்திய தேகமாகக் கொண்டு மீண்டும் பிறக்காமல் நின்றனர். திருவள்ளுவர் பிறவா நெறியை 'மற்றீண்டு வாரா நெறி என்றார்.

''கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி''

இதற்குச் சான்றாக சமயக் குரவர்கள், பட்டி னத்தார், தாயுமானவர், வள்ளலார், சித்தர்கள், பெரிய புராண மெய்யடியார்கள் மற்றும் பலர் மண்ணில் மறையவில்லை. ஆகின்ற நெறியை மேற்கொண் டனர். இதுவே ஆமாறு நெறி ஆகும். ஆமாறு நெறி பிறந்து இறவாதிருப்பது. உடலுடன் சித்தி பெறுவது; இது சிறப்பு நெறியாகும்.

மெய்ஞானிகள் பிறந்து இறவாதிருக்க மக்களுக்கு பலவகை வழிகளைக் காட்டினர். அவை கடினமாக வும், சில எளிமையாகவும் இருந்தன. ஞானிகள் பிறந்து பின் சாவா நெறியாகிய ஆமாறு வழிகளைக் காட்டி மக்களை ஆற்றுப்படுத்தினர். ஆமாறு வழியாகிய இறவாநெறி, மரணமில்லா நெறிகளைக் காண்போம்.

பட்டினத்தார் பிறந்து பின் இறவாதிருக்க மருந் தினைக் கண்டார்.

''பிறவா திருக்க வரம் பெறல் வேண்டும் பிறந்து
விட்டால்
இறவாதிருக்க மருந்துண்டு காண் இது எப்படியோ
அறமார் புகழ்நில்லை அம்பலவாணர் அடிக்கமலம்
மறவாதிருமனமே அதுகாண் நன்மருந்து
உனக்கே''

தில்லை அம்பலவாணரின் திருவடியை மறவா திருக்கும் நிலையே பிறவாதிருப்பதற்கு நல்ல மருந் தாகும். மாணிக்கவாசகரும், நாவுக்கரசரும் ஆமாறு நெறிகள் கூறுகின்றனர் அவற்றைக் காண்போம்.

''ஆமாறுன் திருவடிக்கே அகம் குழையேன்
பூமாலைப் புனைந்தேத்தேன் புகழ்ந் துரையேன்
கோமான்நின் திருவடிக்கே தூகேன் மெழுகேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே'' சார்வானே
- திருவாசகம்

இறைவனின் திருவடியை எண்ணி மனதில் குழை தலும், ஆடுதலும் பூமாலைக்கட்டி அணிவித்தலும் அவனது பெருமைகளைக் கூறுவதும் திருவடியை விடாது பற்றிக் கொண்டு வணங்குதலும் ஆமாறுக் குரிய வழியாகும். இதனைச் செய்யாது வீணாக சாகின்றேனே என்று கூறுவதில் ஆமாறு நெறியைக் காட்டினர்.

கூத்தப் பெருமானின் திருவடியின் மீது எலும் புருகப் பாடுவதும், அவனை எண்ணும் பொழுதெல் லாம் மனம் பதைப்பதும், தலை தாழ்ந்து திருவடியை வணங்குதலும் ஆமாறுக்குரிய வழியாகும். இதனைச் செய்யுவில்லையே என்று வருந்துகின்றனர்.

''ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்
கன்பிலை என்புருகி
பாடு கின்றிலை பதைப்பதும் செய்கிலை
பணிகிலை பாத மலர்
சூடு கின்றிலை சூட்டுகின்றது மிலை
துணியிலி பிண நெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோர் நலநிலை
செய்வதொன் றறியேனே
- திருவாசகம்

உலகில் மீண்டும் பிறவாது நிலைத்திருக்க வேண்டுமானால், தினம் தோறும் அதிகாலையில் எழுந்து கோயிலினைப் பெருக்கி, மெழுகி, பூமாலையை அன்புடன் கட்டி, அதனை இறைவ னுக்குச் சாத்தி, இறைவனின் பெருமையைப் புகழ்ந்து பாடி தலையாரக் கும்பிட்டு, பாடி ஒருகளிப்பால் கூத்தாடி, தலையாரக் கும்பிட்டு இருகைகளையும் தலைமேல் கூப்பி, ஆரூரா என்று அலறிக் கொண் டிருப்பதையே ஆமாறு நெறியாக நாவுக்கரசர் கைக் கொண்டார்.

''நிலை பெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீ வா
நித்தலும்எதம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன் முன் அலகிட்டு மெழுக் மிட்டுப்
பூமாலை புனைந்தேந்திப் புகழ்ந்துப் பாடித்
தலையாரக் கும்பிட்டும் கூத்துமாடிச் சங்கரா
சய போற்றி போற்றி என்றும்
அலைபுனல் சேர் செஞ்சடையெம் ஆதி என்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே''

நம் முன்னோர்கள் சென்ற ஆமாறு வழியில் நாமும் வாழ்ந்து சிறப்படைவோமாக.

★★★

# மருள்போக்கும் அருள்மிகு மீனாட்சி

- சொ.பொ. சொக்கலிங்கம்

உயிர்தந்தாய்; உறங்காமல் உன்னோடு ஓயாது,
உறவாடும், உயிரும் வேண்டும்,
உடல்தந்தாய், ஒருபோதும் பிணியின்றி
உனைவேண்டி,
உழைக்கின்ற உடலும் வேண்டும்.

பயில்கின்ற மதிதந்தாய்; பயிலாமல் வேதபாட,
பாதைகாட்டும் மதியும் வேண்டும்,
பார்வைதரும் கண்கள் தந்தாய்; பாவை
உன்னைப்
பார்க்குமிரு கண்கள் வேண்டும்.

துயிலாத மனம்தந்தாய்; தொடர்ந்துபே ராசைகளைத்
தொடராத மனமும் வேண்டும்,
செம்மையாய் செவிதந்தாய் தெவிட்டாத உன்நாம,
தெளிகின்ற செவிகள் வேண்டும்.

மயிலேறும் முருகோனும், மங்கள விநாயகனும்,
மங்கைபாலொ ருவனும், மனம்நாடும்,
மதுராபுரி ஆளும்மங் கையர்க்கரசியே!
மருள்போக்கும் மீனாட்சி யே!

நீதிவேண்டும்; நிலையான இன்பம்தரும் நீதியோடு,
நிம்மதியும் நிலைக்க வேண்டும்,
நெஞ்சத்தில் அஞ்சாமை நிரம்ப வேண்டும்,
நினைவெல்லாம் உன்நினைவே மலர
வேண்டும்.

அதிபதியாய் மனத்தைநான் ஆள வேண்டும்
அமைதியோடு அறவாழ்வு வாழவேண்டும்,
அகங்காரம் அடியோடு அகல வேண்டும்,
அன்புஎன்றும் அகலாதமன மும்வேண்டும்.

சதிபதிகள் நல்வாழ்க்கை தழைக்க வேண்டும்,
சந்ததிகள் நலமோடு வாழவேண்டும்,
சங்கடங்கள், தொல்வினைகள், தடைகள் நீக்கி
சௌபாக்கிய பெருவாழ்வு தரவேண்டும்.

மதிஉடையான், என்மனமுடையான் மங்கை உன்றன்,
மன்னனானோன் மறுபாகம் ஆனவனே,
மதுராபுரி ஆளும்மங் கையர்க் கரசியே!
மருள்போக்கும் மீனாட்சி யே!

'பயம்' என்றும் 'அன்பு' என்றும், படர்ந்துவரும்
இரண்டுணர்வின்
பாதைமாறி பரிதவிக்கும் மனிதவாழ்வில்,
பயமென்ற பூதம்என்னைப் பகலிரவு தொடராமல்,
பாவையுன்றன் பாதத்தில் பலிகொடுத்தேன்.

துயரம் எனும் மனச்சுழலில் தொடர்ந்து சுற்றி மாந்தர்இனம்,
தொல்லுலகில் பல்தொல்லை தொடரச்செய்யும்,
தொல்வினைகள் நிழல்போலத் தொடராமல்
உன் ஒளியில்
தொலைகின்ற காட்சிகளும் தொடரக்
கண்டேன்.

அயலாத, அகலாத அன்பொன்றால் என்னுள்ளம்,
அன்னையுன்றன் ஒளிமயமாய் ஆகக்கண்டேன்
அன்பிற்கு உருவில்லை அழியாத உயிரொன்றால்
அகவாழ்வும் பெருவாழ்வாய் அரும்பக்
கண்டேன்.

மயிலாடும் அழகர்மலை மைந்தனுந்தன் முருகேசன்
மாமனோடு மலைவாசம் மகிழ்ந்தளித்தாய்,
மதுராபுரி ஆளும்மங் கையர்க் கரசியே!
மருள்போக்கும் மீனாட்சி யே!

முற்றும்.

# வீரநாராயணபுரம் (அ) காட்டுமன்னார் கோயில்

- திருமதி இந்திரா ஆராவமுதன், திருவரங்கம்

ஸ்ரீ நாதமுனிகள் வீரநாராயணபுரம் என்கிற காட்டு மன்னார் கோயிலில் அவதாரம் செய்தார் என்பதும் அவர் கைங்கரியம் செய்து வந்த மன்னார் சன்னதி யின் பெருமாள் வீர நாராயணப் பெருமாள் என்று அழைக்கப்படுகிறார் என்பதும் எல்லாருக்கும் தெரிந்த விஷயம். மேற்படி பெயர்கள் ஏற்படக் காரண மான நிகழ்ச்சியை இப்போது பார்ப்போம்.

மதங்க மகரிஷியின் வேண்டுகோளுக்கு இரங்கி மகாலஷ்மி அவருடைய மகளாக வந்து அவதரித்தாள்.

அவளுடைய சுயம்வரத்திற்கு எல்லா மன்னர் களும் வருகை தந்தனர். காட்டு மன்னார் கோயில் பெருமாளான நாராயணன் தன் வாகனமான கருடனைக் குதிரையாக மாற்றிக் கொண்டு சுயம்வரத்தில் கடைசி யாக வந்து கலந்துகொள்ள அமர்ந்தார். அவரை வரித்து அவருக்கு மாலை சூட்டினாள் லஷ்மி. இது மற்ற மன்னர்களுக்கு பொறாமையை ஏற்படுத்தியது. உடனே எல்லாரும் பெருமாளிடம் போர் புரிய ஆரம் பித்தனர். எல்லாரையும் விரட்டி வாகை சூடியதால் பெருமாளுக்கு வீர நாராயணன் என்ற பெயர் ஏற் பட்டது. மன்னன் போல வேடமணிந்து வந்ததால் மன்னனார் என்றும் அழைக்கப்பட்டார்.

இந்த மன்னனார் சன்னிதியில் கைங்கர்யம் செய்து வந்தார் நாதமுனிகள். இந்த மன்னனாரிடம் உத்திரவு பெற்றுக் கொண்டு வேதத்தை மீட்க குருகூர் சென்ற நாதமுனிகள் அங்கேயே தங்கிவிட்டார்.

''என்னை மறந்து விட்டாயா? உடனே வீரநாரா யணபுரம் திரும்பி வா'' என்று நாதமுனிகள் ஸ்வப்னத் தில் பெருமாள் கூற அவர் திரும்பி வந்தார். பெருமா ளுக்கு பாடிக் காட்டினார்.

மறுபடி நாதமுனிகளின் கனவில் தோன்றி ''அந்தப் பிரபந்தங்களுக்கு பண் அமைக்கச் சொன்னார் பெருமாள்.

நாதமுனிகள் உடனே முதலாயிரம், பெரிய திருமொழி, திருவாய் மொழி ஆகிய மூன்றிற்கும் தேவகானத்தில் இசை அமைத்தார் என்றும் இசைப்பா, இயற்பா என்றும் பாகுபடுத்தினார் என்றும் கோயி லொழுகு கூறுகிறது.

திவ்ய பிரபந்தம் 24ல் இயற்பாப் பிரபந்தங்கள்!! ''திருவெழுக் கூற்றிருக்கை'', 'சிறிய மடல்', பெரிய மடல் என்கிற மூன்றைத் தவிர்த்து மற்ற எட்டுப் பிரபந்தங்களும் அந்தாதிப் பிரபந்தங்கள்.


அந்த காலத்தில் முதல் திருவந்தாதியை 'மூத்த திருவந்தாதி' என்னும், நான்காம் திருவந்தாதியை 'நான்முகன் திருவந்தாதி' என்றும் 'சிறியமடலை' 'சிறுத் திருமடல்' என்றும் பெரிய திருமடலை 'பெரிய திருமடல்' என்றும்தான் அழைத்து வந்தனர்.

ஸ்ரீ ராமானுஜர் காலத்தில்தான் இராமானுஜ நூற்றந்தாதி இயற்பாவாக சேர்க்கப்பட்டதாக கோயிலொழுகு கூறுகிறது. இவ்வாறு, கி.பி. 1856-ல் அச்சிடப்பட்ட ஸ்ரீ கூர்மாசாரியர் பதிப்பில் 'இயற் பாவுடன்' இராமானுஜ நூற்றந்தாதியைச் சேர்த்துப் பதிப்பித்ததாக தெரிகிறது.

நாதமுனிகளைப் போல பிரபந்தங்களுக்கு ராகம், தாளம் அமைத்த ஸ்ரீ அப்பாவு முதலியார் ராமானுஜ நூற்றந்தாதியை தனி நூலாக வெளியிட்டார் எனத் தெரிகிறது.

பின் தேசிகர் ராமானுஜ நூற்றந்தாதியைச் சேர்த்து நாலாயிரமாகக் கொண்டவர் என்றும் தெரிய வருகிறது. ஆக இப்போது இயற்பாவுடன் இராமா னுஜ நூற்றந்தாதியை சேர்த்தே சேவிக்கிறார்கள். பெருமாள் உற்சவத்தில் சப்தாவரணத் திருநாளில் இராமானுஜ நூற்றந்தாதியை சேவிக்கும் வழக்கம் இப்போதும் இருந்து வருகிறது.

இவ்வாறு பல பல சர்ச்சைகள் இருந்தபோதிலும் மன்னனார் உத்திரவின் படித்தான் நாதமுனிகள் தன் மருமகன்களான கீழையகத்தானுக்கும், மேலையகத் தானுக்கும் கற்பித்துப் பரவவைத்தார் என்பதிலும்



அவருடைய வம்சத்தினர் அரையர்கள் என்று அழைக்கப் படுகிறார்கள் என்பதிலும் எள்ளளவு கூட சந்தேகம் கிடையாது.

அப்படிப்பட்ட பிரபந்தங்களை தான் முதலில் கேட்டு அனுபவித்து விட்டு, பின் உலகத்திற்கு காட்டி னார் என்கிறபடி ''காட்டும் மன்னனார்'' என்று அழைக்கப்பட்டு, காட்டும் மன்னனார் வசிக்கும் கோயில் மருவி ''காட்டுமன்னார் கோயில்'' என்று அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. நாதமுனிகள், ஆளவந்தார் அவதரித்த ஸ்தலம். பெருமாள் வீரநாரா யணப் பெருமாள் என்றும் தாயார் ஹேமாம்புஜம் என்றும் அழைக்கப்படுகிறார். இவருடைய வலது கையில் உப்பிலியப்பன் கோயிலில் பெருமாள் கையில் இருப்பது போல ''மாம் ஏகம் சரணம் வ்ரஜ'' என்கிற வசனம் டாலரில் பொறிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. உத்ஸவர் வேணுகோபாலன் ருக்மணி, சத்யபாமாவுடன் எழுந்தருளியிருக்கிறார். பக்கத்தில் ஆளவந்தாரும் இருக்கிறார். ஆளவந்தாரின் திரு நக்ஷத்திரம் ஆடி உத்திராடம். மாச நக்ஷத்திரம் வரும் தினத்தில் தாயார் ஹேமாம்புஜம், ஆளவந்தார் இருவரையும் சன்னிதிக்கு வெளியில் எழுந்தருளப் பண்ணி திருமஞ்சனம் நடத்தி வருகிறார்கள்.

காட்டு மன்னார் கோயிலுக்கு சமீபம் சுமார் 2 கிலோமீட்டர் தொலைவில் ஸ்ரீ நாதமுனிகள் அவ தரித்து வாழ்ந்து வந்த இடத்தில் அவருக்கு கோயில் அமைத்திருக்கிறார்கள். ஸ்ரீ நாத முனிகள், ஆளவந்தார் அவதார ஸ்தலம் என்று பெயர் சூட்டி இப்போது மராமத்து வேலைகள் நடந்து கொண்டு இருக்கிறது.

யாரோ ஒரு அன்பர் சங்கு சக்கரத்துடன் கூடிய ஆஞ்சநேயரை சிற்பமாகச் செய்து வைத்துள்ளார்கள். சன்னிதி வாசலில் பல வண்ணப் படங்கள் வைத்துள் ளது கண்களுக்கு விருந்தாக இருக்கிறது.

இந்த ஸ்தலத்தில்தான் ராமர் வந்து ''நாதமுனிகள் எங்கே'' என்று கேட்டதாகவும், நாதமுனிகள் அப்போது யோகத்தில் இருந்ததாகவும் தெரிகிறது. இரண்டு வில்லிகள், ஒரு பெண், ஒரு குரங்கு வந்தார்கள் என்று பெண் சொல்லக் கேட்ட நாதமுனிகள் வந்து ''ராம, லக்ஷ்மண, சீதை, அநுமன்'' என்று அறிந்து அவர்களைத் தேடி ஓடினார். அவர்கள் முதுகு தெரிய கங்கை கொண்ட சோழபுரத்திற்கு செல்லும் வரை ஓடியவர் ஒரு கல் தடுக்கிக் கீழே விழுந்தார். அப்படியே திருநாட்டுக்கு எழுந்தருளிவிட்டார் என்றும், அந்த இடம் சொர்க்க பள்ளம் என்ற ஊர் என்றும் தெரியவருகிறது. அவரு டைய உடலை அங்கேயே பள்ளிபடுத்தப்பட்டார் என்றும் அங்கு அவருக்கு பிருந்தாவனம் அமைக்க வேண்டும் என்றும் உள்ளூர் வாசிகள் விரும்புவதாக தெரிகிறது.

ஸ்ரீ நாதமுனிகள் இல்லையென்றால் நமக்கு நாலாயிரம் கிடைத்தே இருக்காது. அவருடைய அவதாரத் தலத்திலும், ஸ்ரீரங்கம் கோயில் தெற்கு கோபுரத் திற்கு, நுழைந்தவுடன் இடதுபுறத்தில் இருக்கும் முதல் சன்னிதிதான் ஸ்ரீ நாதமுனி சன்னிதி. இந்த இரண்டு இடங்களைத் தவிர வேறு சன்னிதி அவருக்கு கிடையாது. கம்பரின் ராமாயண அரங்கேற்றம் நடக்க மிகுந்த உதவி செய்ததால் அவர் சன்னிதிக்கு எதிரில் உள்ள 4 கால் மண்டபத்தில் ஒரு தூணில் கம்பரின் அஞ்சலி செய்யும் சிற்பத்தை நாம் பார்க்க முடிகிறது. அத்யயன காலம் முடிந்தவுடன் மறுபடி நாலா யிரத்தை பாராயணம் செய்து அவருக்கு வழிபாடு நிகழ்த்துவோமாக.

★★★

# ஸ்ரீராமநவமி

- திருமதி மீனாட்சி கோகுலவாசன்

சூரிய வம்சத்து அரசர்கள் ஆண்டு வந்ததும், ஏழு புண்ணிய மோக்ஷபுரிகளில் முதன்மைப் பெற்றதும், உத்தரகோசல ராஜ்யத்தின் தலைநகரமாக விளங்கியதும், 'மனு' என்னும் மனித குல முதல்வரால் கட்டப்பட்டதுமான நகரம் அயோத்தி ஆகும்.

கந்தபுராணத்தில் 'மீன்வடிவில்' அமைந்துள்ள நகரம் என்று வர்ணிக்கப்படுகிறது அயோத்தி. வேதத்திலேயே, 'அயோத்யா சப்தம்' இடம்பெற்றிருப்பது அதன் தனிச் சிறப்புக்கு ஒரு எடுத்துக்காட்டு.

சக்கரவர்த்தியாய் ஆட்சிபுரிந்ததோடு, ராஜரிஷியாகவும் இருந்து, வேத மந்திரம் கண்ட 'மாந்தாதா, அரிச்சந்திரன், பகீரதன், திலீபன், ரகு போன்றோர் ஆட்சி புரிந்தவர்கள்! இவர்கள் வழியில் தசரத சக்ரவர்த்தியும் ஆவார். இவர் பல யாகங்கள், யக்ஞங்கள், அஸ்வமேதயாகங்கள் பல செய்து சக்ரவர்த்தியானார்! குறைகளொன்றும் இல்லாமல் சிறந்த முறையில் அரசாண்டு வந்தார். அப்படிப்பட்ட அவருக்கு நீண்ட நாள் கவலை ஒன்று வாட்டியது! புத்திரபாக்கியம் இல்லாத குறைதான் அது?

தசரதனின் தேரோட்டியான சுதர், ''அரசே!'' ஒரு அஸ்வமேத யாகத்தை 'புத்திர காமேஷ்டியாகச் செய்ய வேண்டும்; அதை நடத்திக் கொடுப்பவர், 'விபண்டக மகரிஷியின் மகனான ரிஷ்யசிங்கர்' என்ற மகரிஷி யாவார்'' என்று சொன்னார்...!

அதன்படி தசரத சக்ரவர்த்தி புத்திரகாமேஷ்டி யாகம் செய்ய, ரிஷ்ய சிங்கர், அவர் மனைவியுடன், ஏராள முனிவர்களையும் வரவழைத்து, எல்லா ஏற்பாடுகளுடன் நல்ல முறையில் முறைப்படி யாகம் செய்யலானார். தசரதரும் தம் மூன்று பத்தினிகளான கௌசல்யா, கைகேயி, சுமித்திரை இம்மூவருடன், மிகுந்த பக்தியுடன் யாகத்தை நடத்தினார். யாகத்தின் பூர்ணாஹுதி முடிக்கும் மந்திரம் நடக்கும் சமயம், அக்னி குண்டத்திலிருந்து தேவபுருஷன் ஒருவன் தோன்றினான்! அவனே அக்னிதேவன்! அவன் கைகளில் பொன்மயமான பாத்திரத்தை ஏந்திக் கொண்டு தசரதனிடம், ''ராஜனே! பெற்றுக் கொள்! இப்பாத்திரத்தில் உள்ள பாயசம் தேவர்கள் அனைவரும் சேர்ந்து உனக்குக் கொடுத்தனுப்பியுள்ளனர். இதை உன் மனைவிகளுக்குப் பகிர்ந்து அளி, இதன் மூலம் உனக்கு புத்திர பாக்யம் கிடைக்கும்'' என்று வாழ்த்திக் கொடுத்ததை, தசரதர் பெற்றுக் கொண்டு அதைப் பகிர்ந்தளித்தார். அதில் பாதியை கௌசல்யாவுக்கும், மறு பாதியில் பாதியை சுமித்திரைக்கும், மீதி உள்ள பாதியில் (பாதியை) இரண்டாக்கி கைகேயிக்கு ஒரு பாகமும், மீண்டும் சுமித்திரைக்கு ஒரு பாகமும் கொடுத்தார்.

'விஸ்வாஸ்' என்ற முனிவரின் மனைவியான இளையவள், கேகசியாவாள். அவளுக்குப் பிறந்தவர்கள் இராவணன், கும்பகர்ணன், சூர்ப்பணகை விபீஷணன் ஆகியோர்கள்! இந்த இராவணன் கடும் தவம் செய்து பிரம்மதேவனிடமிருந்து பல அரிய வரங்களைப் பெற்றான். வரத்தின் பலத்தால் மூன்று உலகங்களையும் வென்று, தேவர்களை அடிமைப் படுத்தினான்; ரிஷிகளையும் யக்ஷர்கள், தேவர்கள், அந்தணர்கள் முதலானவர்களை மிகவும் கொடுமை படுத்தி வந்தான். அவனுடைய கொடுமைகளைத் தாங்க மாட்டாமல் தேவர்கள், பிரம்மனிடம் முறையிட்டனர். இராவணன் பிரம்மனிடம் கேட்ட வரம், 'கந்தர்வர்கள், யக்ஷர்கள், தேவர்கள், அசுரர்கள் இவர்களால் தனக்கு மரணம் நேரக்கூடாது' என்பதாகும். இதைக் கூறிய பிரம்மன் மானிடர்களை அந்த வரிசையில் சேர்க்காததால், அவன் ஒரு மானிடரால் கொல்லக் கூடியவன் என்று கூறினார்...!

இதன்பின் பிரம்மனுடன் தேவர்கள் அனைவரும் ஒன்று கூடி, மகாவிஷ்ணுவிடம் சென்றனர். அனைத்தையும் கூறி 'அவரே, மானிடராக அவதரித்து இராவணனை வதம் செய்து, உலகமனைத்தையும் காக்க வேண்டும்' என்று முறையிட்டனர், பகவானும் இதற்குச் சம்மதம் அளித்து அனுப்பினார்.

அப்படி மானிடனாக அவதரிப்பதற்குத் தகுந்த அம்சங்களை ஆராய்ந்து பார்த்ததில், அயோத்தியில், தசரத சக்கரவர்த்திக்கு மகனாகப் பிறப்பது என்று முடிவெடுத்தார்.

புத்திர காமேஷ்டி யாகம் செய்த தசரதர், அதன் மூலமாக கிடைத்த பாயசத்தைப் பங்கிட்டு கோசலை, கைகேயி, சுமித்திரை மூவருக்கும் கொடுத்ததும், அதன் மூலமாக தனது மணி வயிற்றில் கோசலை யானவள் ராமனைக் கருதரித்தார்.

ஸ்ரீராமன் அவதாரம் எடுப்பதற்கு முன்னால் 'அசுரர்களின் கொடுமையிலிருந்து நம்மையெல்லாம் காத்தருள மகாவிஷ்ணு ராமனாக இப்பூவுலகிற்கு வரப்போகிறார் என்று அறிந்த தேவர்கள் ஸ்ரீராமனின் கர்ப்பவாசத்தை உற்சவமாகக் கொண்டாடினார் கள்! அவர்கள் ஆனந்தமாகக் கொண்டாடிய உற்சவம் தான் கர்ப்போற்சவம்...!

எந்த தாரகமந்திரத்தைச் சொன்னால் மறுவீட்டில் பேரின்பம் கிட்டுமோ, எந்த கல்யாண குணங்களைக் கூறினால் பரமானந்த சுகத்தை அடையப் பெறு வோமோ, எந்த சரிதம் நூறு கோடி புண்ணியங்களை ஏழேழு தலை முறைகளுக்கும் நல்கிடத்தகுமோ, அந்த மன்னு புகழ் கோசலை தன் மணிவயிறு வாய்த்த மாதவன் அவதரித்த புனித மண் அது; அதுவே அயோத்தி மண்!

ஸ்ரீராம பிரான் கோசலை கர்ப்பத்தில் பன்னி ரண்டு மாதங்கள் வாசம் செய்து, ஒரு சித்திரை திங்கள், நவமி நன்னாளில் புனர்வசு நட்க்ஷத்திரத்தில் 4-ம் பாதம் இறுதியில் அவதரித்தான்.'' என்பர் வால்மீகி தம் ராமாயணத்தில்.

கைகேயிக்கு பரதனும், சுமித்திரைக்கு லட்சும ணன், சத்ருக்னன் என்று இருவரும் பிறந்தார்கள். புத்திர பாக்யம் வேண்டும் என்று நினைத்த தசரத சக்ரவர்த்திக்கு ஒன்றுக்கு மூன்று என்பார்கள், இவ ருக்கோ நான்காகப் பலிதம் ஏற்பட்டது என்பது மிகச் சாலச் சிறந்த அம்சமாகும். தசரத மன்னன் எவ்வாறு தன் மகிழ்ச்சியை, ஆனந்தத்தைக் கொண்டாடியிப்பார் என்பது எழுத்தில் அடங்கா நிகழ்ச்சியாகும்! அயோத் தியே ஆனந்த வெள்ளத்தில் மூழ்கியது எனலாம் தேவர்களும், யக்ஷர்களும், முனிவர்களும் இராம அவதாரம் அறிந்து எல்லையில்லா ஆனந்தப் பரவசத் தில் திளைத்தனர். ஸ்ரீராமர் பிறந்ததை அயோத்திய மக்களைத் தவிர விண்ணவர்களும் கொண்டாடினார் கள் என்பது சந்தேகமில்லாத உண்மையாகும்....

பங்குனி மாதத்தில் வசந்த நவராத்திரி என்று சொல்வார்கள். சுக்ல பக்ஷ நவமி திதி அன்று பகவான் ஸ்ரீராமச்சந்திரரின் பிறந்த நாளை 'ஸ்ரீராம நவமி' என்று கொண்டாடுகிறோம்...!!

இந்துக்கள் பொதுவாக, ஒவ்வொரு வருடமும் இரண்டு நவராத்திரியைக் கொண்டாடுவார்கள். பாத்ர பத மாதம் என்கிற புரட்டாசி மாதத்தில் சுக்லபக்ஷ (வளர்பிறை) பிரதமையில் இருந்து ஒன்பது நாட்கள் தேவிக்கு மிகவும் உகந்த நவராத்திரியாகக் கொண் டாடப்படுகிறது. அதேபோல் பங்குனி மாதம் அமா வாசைக்கு அடுத்த நாளிலிருந்து சுக்கில பக்ஷத்தில் (வளர்பிறை) ஒன்பது நாட்கள் வசந்த நவராத்திரி ஆகும். ஒன்பதாவது நாளில் நவமி திதி அன்று ஸ்ரீராமனின் பிறந்த தினம் கொண்டாடப்படுகிறது.

'கர்ப்போத்ஸவம்' என்பது பங்குனி மாத சுக்ல பக்ஷ பிரதமை முதல் ஆரம்பித்து ஸ்ரீராம நவமியுடன் பூர்த்தி செய்வது; நவமி முதல் ஆரம்பித்து பின் ஒன்பது நாள் செய்வது 'ஜன்மோத்ஸவம்' எனப்படும். இரு வகையாகவும் பூஜித்துக்கொண்டாடலாம்.

'பித்ரு வாக்கிய பரிபாலனம்' என்றால், தந்தை சொற்படி நடந்தார் என்பது மட்டும் பொருள் அல்ல; தந்தை பிறருக்குக் கொடுத்த வாக்கையும் அவர் காப்பாற்றினார் என்பது பொருள்.

ஜய விஜயர்கள் மட்டும் அறியாமையாலும், ஆணவத்தாலும் தவறு செய்யவில்லை. சனகாதி முனிவர்களும் கோபத்துக்கு அடிமையாகி, சாபம் தந்து பாபம் செய்துவிட்டார்கள். ஆனால், பகவான், முனிவர்களைச் சபிக்கவில்லை. மாறாக சபிக்கப் பட்டவர்களுக்கு சாபவிமோசனம் தந்தார். நிகழும் எந்த நிகழ்ச்சிகளும் ஒரு காரண காரியத்தோடு பகவா னுடைய சங்கல்பத்தால் தான் நிகழ்கின்றன என்பது தத்துவம்!

ஜய விஜயர்களின் மூன்றாவது பிறவி கம்சன், சிசுபாலன் ஆவர். திருமால் ஸ்ரீகிருஷ்ணாவதாரம் எடுத்து இவர்களுக்கு சாபவிமோசனம் அளித்ததில், வைகுண்டத்தில் துவாரபாலகர்களாக பணியை ஏற்று காத்து வருகிறார்கள்! மேலும் கிருஷ்ணாவதாரத் தில், ராமாவதாரத்தில் செய்ய விட்டதையும், மற்றும் ஏராளமான நிகழ்ச்சிகள் செய்து முடித்தார் எனலாம்.

ஸ்ரீமந்நாராயணன் அனுக்கிரகப்படி ஜய விஜயர் கள் முதல் பிறவியில் ஹிரண்யன் - ஹிரண்யாக்ஷக னாகவும், இரண்டாவது பிறவியில் ராவணன் கும்ப கர்ணனாகவும், கடைசி மூன்றாவது பிறவியில் கம்சன் சிசுபாலனாகவும் பிறவி எடுத்தார்கள்; பகவானும் வராக, நரசிம்ம, ராம, கிருஷ்ண அவதாரங்கள் எடுத்து, அவர்களை சாபத்திலிருந்து விடுவித்தார். அதன் பிறகு ஜயவிஜயர்கள் வைகுந்தம் சென்று பழையபடி துவார பாலகர்களாகப் பணிபுரியத் தொடங்கினார்கள் என்ப தாகும்.

இராவண வதத்திற்காக தேவர்களின் வேண்டு கோளுக்கிணங்க மானிடனாக அவதரிக்க சம்மதம் அளித்ததைப் பார்த்தால், விஷ்ணுவானவர், தான் மானிடனாக அவதரிக்க வேண்டிய சூழ்நிலை அமைந் தது எனலாம். பிருகுமுனிவரின் சாபம், ஈசனின் வரம் இவைகளின்படி இந்த ராமாவதாரத்தில், 'தான்பகவான் என்பதை மறந்து மாயையில் சிக்கியவராக, தாய், தந்தை, தமையர்கள், பாசம், பந்தம், மனைவியை பிரிவது, துக்கம், சோகம், சிநேகம், சரணடைந்த வர்கள் விரோதியானாலும் மன்னிப்பது, தியாகம், மனிதர்கள் மட்டுமல்லாமல் விலங்குகள், ஜாதிப் பிரிவினையின்றி அன்புடைமை, சகிப்புத் தன்மை, விட்டுக் கொடுத்தல்' என உயர்ந்த மானிட குணங்களை இராமாவதாரத்தில் உணர்த்துகின்றார்.

ஸ்ரீபகவான் வைகுண்டத்தை தியாகம் செய்தார். அயோத்தியில் பிறந்தார், அதையும் தியாகம் செய்து, தாய்தந்தை சகோதரர்களை விட்டு, காடு சென்றார், அங்கு மனைவியைப் பிரிந்து, சுகம், நாடு, வீடு எல்லாவற்றையும் தியாகம் செய்தார். மிருகங்கள், கொடிய ராக்ஷசர்கள், நல்வாழ்வையும் நிலைநாட்டிய தியாகச் செம்மல்; நிஜமான தியாகி, ராமச்சந்திர மூர்த்தியே ஆவார்.

ரகுவம்ச மணி விச்வரூபவன் ஆன ஸ்ரீராமர், 'அவருடைய ஒவ்வொரு அங்கத்திலும் உலகங்கள் இருக்கிறது என எனலாம். பாதாளம், அவருடைய சரணம்! பிரம்மலோகம் அவரது சிரசு, கதிரவன் அவரது கண், மேகம் அவரது கூந்தல், அசுவனி குமாரர்கள் அவரது நாசி, அவர் இமைப்பதே, இரவு பகல். பத்து திசைகளும் அவரது செவி; என வேதம் வர்ணிக்கிறது!

சூரிய குல மன்னர்களால் கட்டப்பட்ட புனித மான அயோத்தி மாநகரில், ரகுவம்சத்தில், தசரத சக்ரவர்த்திக்கு அவதார புருஷனாகத் தோன்றியவர் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி!

பரமாத்மா, ஸ்ரீராமனாக, சக்ரவர்த்தித் திருமகனாக அவதரித்த தினமே 'ஸ்ரீராம நவமி'யாகும். இந்நாள் விழாவாகக் கொண்டாடப்படுகிறது...!

நாம் எத்தனையோ பிறந்த நாட்களைக் கொண் டாடுகிறோம் ஆனால், புண்ணிய பாரதத்தில் மட்டும் அல்லாமல், உலகெங்கிலும் இந்து தர்மத்தைக் கடைப்பிடிக்கும் ஒவ்வொருவரும் இரண்டு பிறந்த நாட்களைக் கண்டிப்பாகக் கொண்டாட வேண்டும். ஒன்று ஸ்ரீராம நவமி, மற்றொன்று ஸ்ரீ கிருஷ்ணன் அவதரித்த ஜென்மாஷ்டமி தினம் ஆகும். ஸ்ரீமந்நாரா யணன் பூவுலகில் மனிதனாகத் தோன்றி சத்தியத்தையும் தர்மத்தையும் கடைபிடித்து வாழவேண்டிய விதி முறைகளை உபதேசங்களாக வகுத்துத் தந்த அவதாரம் கிருஷ்ணாவதாரம்; அவ்வாறு வாழ வேண்டிய வழி முறைகளை வாழ்ந்து காட்டிய அவதாரம் ஸ்ரீராமாவ தாரம் ஆகும்.

'நாராயணாய' என்கிற நாமத்தின் இரண்டாவது எழுத்தும், 'நமச்சிவாய' என்ற பஞ்சாட்சரத்தின் இரண டாம் எழுத்தையும் ஒருங்கே இணைத்துக் கொண்டு 'தாரக' மந்திரமாக விளங்குவது 'ராம' என்னும் சப்தம். ராம நாமத்தின் மகிமையை அளவிட்டுச் சொல்ல முடியாது.

ராம நாமத்தை ஒரு தரம் சொல்லுவது சகஸ்ர நாமத்தின் ஆயிரத்து எட்டும் (1008) ஒரு சேர சொல்லு வதற்குச் சமமாகும் என்று பொருள் கொண்ட இந்த ஸ்லோகம் விஷ்ணு சகஸ்ரநாமத்தில் உள்ளது.

ஸ்ரீராம ராம ராமேதி
ரமே ராமே மனோரமே!
ஸகஸ்ர நாம தத்துல்யம்
ராம நாம வரானனே!!

ஸ்ரீராமரை நினைக்கும்பொழுது அவருடைய இமயச் சீலமும், சாந்த கோலமும், ஆதர்ச வாழ்வும், நம்மை அவனுக்கு உடனே அடிமையாக்குகின்றன! மானிடத்தை வெற்றியுடையதாக்கிய பெருமை ஸ்ரீராமபிரானுக்கே உரியது!

உபவாசமும், புண்ணிய தீர்த்த யாத்திரையும் அளிக்க இயலாத, வினை தீர்க்கவல்ல மந்திரம் 'தாரக' மந்திரம் இராம நாமம் ஆகும்.

உண்மை பக்தியுடன் நமது உள்ளத்திலிருந்து வெளிப்படும் வேண்டுதல்களை ஏற்று, அந்த சத்திய விரதனான ராமர் நிச்சயம் நமக்கு அருள்பாலிப்பார்...!

ஸ்ரீராமனின் ஜன்ம தினமான ஸ்ரீராம நவமியன்று முறைப்படி விரதமேற்று, பூஜித்து வழிபட அவன ருளால் அல்லல் நீங்கி அருள்பெறுவோமாக.!!

இவ்வாண்டு இராம நவமி விழா, 30-03-04 அன்று கொண்டாடப்படுகிறது.

★★★



சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் திருக்குட நீராட்டுவிழா 11-02-03 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் நம் இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு ஜி. இராமகிருஷ்ணன் இ.ஆ.ப. அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். அறநிலையத் துறையின் தலைமைப் பொறியாளர் திருமிகு வெ. சோமசுந்தரம் பி.இ., எம்.எஸ்.சி அவர்கள், இணை ஆணையாளர் (திருப்பணி) திருமிகு ப. தனபால் எம்.ஏ., பி.எல் ஆகியோரும் இவ்விழாவில் பங்குகொண்டு சிறப்பித்தார்கள். திருக்கோயிலின் இணை ஆணையாளர் / நிர்வாக அதிகாரி திருமிகு தி. ஜெயராமன் பிஏ.பி.எல் அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.



சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் திருக்குட நீராட்டுவிழா 11-02-03 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் நம் இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு ஜி. இராமகிருஷ்ணன் இ.ஆ.ப. அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். அறநிலையத் துறையின் தலைமைப் பொறியாளர் திருமிகு வெ. சோமசுந்தரம் பி.இ., எம்.எஸ்.சி அவர்கள், இணை ஆணையாளர் (திருப்பணி) திருமிகு ப. தனபால் எம்.ஏ., பி.எல் ஆகியோரும் இவ்விழாவில் பங்குகொண்டு சிறப்பித்தார்கள். திருக்கோயிலின் இணை ஆணையாளர் / நிர்வாக அதிகாரி திருமிகு தி. ஜெயராமன் பிஏ.பி.எல் அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானி ஜான் கான் சாலை, சென்னை - 600 014.